விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# வலம்புரி

# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 23 புதன்கிழமை (09.10.2002) தொலைபேசி- 2223378 ஒலி 294

# 96ம் ஆண்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட உரும்பிராய் இளைஞன் வவுனியா வைத்தியசாலையில்!

## சித்தப் பிரமை தெளிந்து வெளியிட்ட தகவல்

(வவுனியா)

1996ம் ஆண்டு காணாமல் போன யாழ் இளைஞர் ஒருவர் வவுனியா ஆதார வைத்தியசாலையில் தங்கியிருப்பதாக திடுக்கிடும் தகவலொன்று வெளியாகியுள்ளது.

பிரஸ்தாப இளைஞனை இராணுவத்தினர் 96ம் ஆண்டு கைது செய்ததாகவும் பின்னர் 2000ஆம் ஆண்டு வவுனியா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த வேளையில் இரண்டு கண்களும் தோண்டி எடுக்கப்பட்டு சித்த சுவாதீன மற்றவராக வாய் பேசமுடியாத நிலையில் பிரஸ்தாப இளைஞர் காணப்பட்டதாகவும் தெரியவருகிறது.

தற்பொழுது சிகிச்சைக்குப் பின்னர் ஓரளவு குணமடைந்துள்ள பிரஸ்தாப இளைஞர் தன்னைப் பற்றி குறிப்பிடுகையில்:-

தனது பெயர் ஜெயபாலன் எனவும், தந்தையின் பெயர் பாலசிங்கம், தாயார் பெயர் சரஸ்வதி என்றும், தனது சொந்த இடம் உரும்பிராய் மேற்கு என்றும் வைத்தியசாலை தாதியர்களிடம் தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

1996ம் ஆண்டு தன்னை உரும்பிராய் மேற்குப் பகுதியில் வைத்து இராணுவத்தினர் கைது செய்ததாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை பிரஸ்தாப இளைஞர் எபபொழுதும் உறக்கத்திலேயே இருப்பார் எனவும், சாப்பாடு கொடுத்தால் அதனை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் உறங்கிவிடுவார் என்றும், அண்மைக்காலமாகத்தான் அவ் இளைஞன் வாய்பேசத் தொடங்கியதாகவும் வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 30வயது மதிக்கத்தக்க இவர் நடுத்தர உயரமுடையவர் எனவும், வவுனியா ஆதார வைத்

(10ம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர்களுக்கு நீதிமன்றம் பிணை அனுமதி

# நிபந்தனையின்றி விடுவித்தால் மட்டுமே

# ஆறு படையினரும் விடுவிக்கப்படுவர்!

## விடுதலைப்புலிகள் அறிவிப்பு

(திருகோணமலை நிருபர்)

**திருகோணமலை முள்ளிப் பொத்தானையில் வைத்து கடந்த மாதம் 2ம் திகதி கந்தளாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களும் தலா 25ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா இரண்டு ஆட்பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.**

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இரண்டு விடுதலைப்புலி உறுப்பினர்களும் நிபந்தனையற்ற முறையில் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் அவர்களை பிணை மூலம் வெளியில் எடுதப்பதற்குத் தாம் தயார் இல்லை என்றும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் ஆறு இராணுவத்தினரின் விடுதலை கேள்விக்குறியாகியுள்ளது.

திருகோணமலை முள்ளிப்பொத்தானை வீதியில் ஆயுதங்களுடன் நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் கந்தளாய்ப் பொலிஸாரினால் கடந்த மாதம் 2ம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

இரண்டு விடுதலைப்புலி உறுப்பினர்களின் கைதை அடுத்து திருகோணமலையில் இருந்து 12கிலோ மீற்றருக்கு அப்பால் வில்வம் விகாரைக்கு அருகில் வைத்து விடுதலைப் புலிகளினால் 7 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டிருந்த ஏழு இராணுவத்தினரில் ஒருவர் கடந்த

(10ம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் விடுதலை குறித்து

## அன்ரன் பாலசிங்கத்தின் வன்னிப்பயணம் தாமதம்

(கொழும்பு)

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இம்மாதம் 31ம் திகதி தாய்லாந்தில் இடம் பெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தைக்கு முன் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர், விடார் ஹெல்கிசன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்குமிடையிலான சந்திப்பில் தாமதம் இருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரபபன மல்வதத பீடாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## கைதிகளை விடுவிக்கக்கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

தென்னிலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்

இவ்வார்ப்பாட்டப் பேரணியிலும் மறியற்போராட்டத்திலும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட

**2ம் திகதி கந்தளாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களும் தலா 25ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா இரண்டு ஆட்பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.**

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இரண்டு விடுதலைப்புலி உறுப்பினர்களும் நிபந்தனையற்ற முறையில் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் அவர்களை பிணை மூலம் வெளியில் எடுதப்பதற்குத் தாம் தயார் இல்லை என்றும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் ஆறு இராணுவத்தினரின் விடுதலை கேள்விக்குறியாகியுள்ளது.

திருகோணமலை முள்ளிப்பொத்தானை வீதியில் ஆயுதங்களுடன் நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் கந்தளாய்ப் பொலிஸாரினால் கடந்த மாதம் 2ம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

இரண்டு விடுதலைப்புலி உறுப்பினர்களின் கைதை அடுத்து திருகோணமலையில் இருந்து 12கிலோ மீற்றருக்கு அப்பால் வில்வம் விகாரைக்கு அருகில் வைத்து விடுதலைப் புலிகளினால் 7 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டிருந்த ஏழு இராணுவத்தினரில் ஒருவர் கடந்த

(10ம் பக்கம் பார்க்க)

# கைதிகளின் விடுதலை குறித்து பிரதமர் -கூட்டமைப்பு எம்.பிகள் சட்டமா அதிபரைச் சந்திப்பர்!

(கொழும்பு)

தம்மை விடுவிக்கக் கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிகளும் இணைந்து சட்டமா அதிபர் கமல சபேசனை இன்று காலை 10மணிக்கு சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளனர்.

இச்சந்திப்பு பாராளுமன்றக் கட்டிடத் தொகுதி அல்லது அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பினை அடுத்து அரச தரப்புப் பிரதிநிதிகளுடன், தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிகள் சேர்ந்து சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்திக்கவுள்ளனர்.

இதேவேளை தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து கைதிகள் விடுதலை தொடர்பாகக் கலந்துரையாடியபோது, மயிலந்தனைப் படு

(10ம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரசியல் கைதிகளை அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிறைகளில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியக விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் ச.சத்தியசீலனால் விடுக்கப்பட்ட அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பல ஆண்டுகளாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தமக்கு நீதி கிடைக்காத நிலையில் தற்பொழுது சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருவதுடன் அவர்களில் பலரின் உடல் நிலை கவலைக்கிடமாகவும் உள்ளது. தொடர்ந்து வந்த அரசாங்கங்களிடமும் சிவில் நிறுவனங்களிடமும் தங்களை நீதி மன்

(10ம் பக்கம் பார்க்க)

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இம்மாதம் 31ம் திகதி தாய்லாந்தில் இடம் பெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு முன் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர், ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்குமிடையிலான சந்திப்பில் தாமதம் இருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரபபன மல்வதத பீடாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

# கைதிகளை விடுவிக்கக்கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

தென்னிலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைககப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும், மறியல் போராட்டமும் நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

இவ்வார்ப்பாட்டப் பேரணியிலும் மறியற்போராட்டத்திலும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை 10மணி முதல் 12 மணிவரை நடைபெற்ற இவ்வாரபாட்டப்பேரணியானது வவுனியா

(10ம் பக்கம் பார்க்க)

# கைதிகளுக்கு ஆதரவாக இன்று ஆர்ப்பாட்டம்!

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல்கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இன்று நண்பகல் 12மணி முதல் ஒருமணிவரை யாழ் குடாநாட்டு மாணவர்கள் தமது பாடசாலைக்கு முன்பாக அடையாள மறியல ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை அரச ஊழியர்கள் அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், வர்த்தக சமுகத்தினர் அனைவரும் இன்று நண்பகல் 12மணி முதல் 1மணி வரை கைதிகளின் போராட்

(10ம் பக்கம் பார்க்க)

# வடக்குக் கிழக்கை இணைத்தால் முஸ்லிம்களுக்கு தனி அலகு தேவை

## பிரதமரைச் சந்தித்து பேரியல் கோரிக்கை

(கொழும்பு)

இப்பொழுது நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்களின் இறுதியில் ஒருதீர்மானம் எடுக்கப்படும் போது அதனால் எந்தவொரு சமூகமும் பாதிக்கப்படமாட்டாது எனறு தன்னை திங்களன்று சந்தித்து 'நுஆ' தலைவர்களிடம் பிரதமர் தெரிவித்தார். கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றி பேரியல் அஷ்ரப்பும் அவரது குழுவினரும் அலரி மாளிகையில் பிரதமரைச் சந்தித்து ஒருமணி நேரம்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு

# யாழ். வணிகர் கழகம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானத்திற்காக ஸ்ரீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு இயல்புநிலை தோற்றுவிக்கப்பட்டுக் கைதிகள் பரிமாற்றமும் செய்யப்பட்டுவரும் நேரத்தில் எதுவித குற்றச்சாட்டுகளும் சுமத்தமுடியாத நிலையில் நீண்டகாலம் சிறையில் அடைக்கப்பட்டு வாடும் தமிழ் அரசியற் கைதிகளின் உண்ணாவிரதத்திற்கு சகல தமிழ் மக்களும் அவர்களின் விடுதலையை வேண்டி அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்

யாழ். வணிகர்கழகம்விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை சுதந்திரம் பெற்றபின் தமிழ் மக்களுக்கு இலங்கை அரசாங்கங்களினால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக தமிழ் மக்கள் அகிம்சை வழியில் பல போராட்டங்களை நடத்தினர். அவை அப்போதைய அரசாங்கங்களினால் நசுக்கப்பட்டதன் காரணமாக தமிழ் மக்கள் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இருபதாண்டுப் போரின்பின், இத்தனை அழிவுகளின் பின் தனது பொருளாதார வீழ்ச்சியை உணர்ந்துகொண்ட அரசாங்கம் அரசியல் தீர்வுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் உடன்விடுதலை செய்ய வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

## அரசியல் கைதிகளை விடுதலை செய்க

### செல்லச்சாமி பிரதமரிடம் கோரிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம்.எஸ் செல்லச்சாமி பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு இதுதொடர்பாக கடிதமொன்றினையும் அனுப்பிவைத்துள்ளார்.

பிரதமரினாலும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதே கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

எனவே இந்த நிலைமையை தொடரவிடாது கைதிகளை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும் எனவும்அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-8)

## யாழ். மாவட்டத்தில் மூவிமுண்டோ நிறுவனம் பாரிய விவசாய திட்டத்தை ஆரம்பித்துள்ளது

(தென்மராட்சி)

இத்தாலியைச் சேர்ந்தசர்வதேச அரசசார்பற்ற நிறுவனமாகிய மூவிமுண்டோயாழ்மாவட்டத்தில் ஒன்பது பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 350 குடும்பங்களுக்கான விவசாயத்திட்டத்தினை ஐரோப்பிய யூனியனின் 2லட்சத்து 50ஆயிரம் யூரோ நாணய பெறுமதியில அமுல்செய்ய ஆரம்பித்துள்ளது.

இதுதொடர்பாக மூவிமுண்டோ நிறுவனத்தின் திட்ட இணைப்பாளராகிய செல்வி டானியேல் பிராண்டி சர்வோதய செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது:

மூவிமுண்டோ நிறுவனம் முதல்தடவையாக தற்போது யாழ்ப்பாணத்தில் இலங்கை சர்வோதய சிரமதான இயக்கத்தினருடன் கூட்டிணைந்த இத்திட்டத்தினை அமுல்செய்கின்றது இத்திட்டத்திற்கான பயனாளிகளை கரவெட்டி சாவகச்சேரி, தெல்லிப்பழை கோப்பாய், சண்டிலிப்பாய் சங்கானை, உடுவில், வடமராட்சிகிழக்கு, பருத்தித்துறை ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளில் விவசாயஅமைப்புக்கள் மற்றும் கிராமசேவையாளர்கள் மூலமாக தெரிவுசெய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு விதைநெல், மரக்கறிவிதை, மரக்கன்றுகள் மண்வெட்டிகள், நீர்இறைக்கும் இயந்திரங்கள், உரவகைகள் என்பன வழங்கப்படவுள்ளன

அத்துடன் இந்தியாவிலுள்ள பெங்களூரை மையமாகக் கொண்ட அவுட்றிச் (O U T REACH) எனும் அரசசார்பற்ற நிறுவனம் மூலம் தெரிவுசெய்யப்பட்ட திட்டப்பயனாளிகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் விவசாயப்பயிற்சி இருவாரங்களுக்கு வழங்கப்படும் எனவும் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

ஆறுமாதகாலத்திற்கு அமுல் செய்யப்படும் இத்திட்டத்தின் கீழ் ஒன்பதுபிரதேச செயலர் பிரிவுகளிலும்தெரிவு செய்யப்பட்ட 160குடிநீர் விவசாயக்கிணறுகள் புனரமைப்புச் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் திட்ட இணைப்பாளர் செல்வி டானியேல் பிராண்டி குறிப்பிட்டார்

மூவிமுண்டோவினால்ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக அமுல்செய்தபின் எதிர்காலத்தில் பலவேறு புனரமைப்பு, அபிவிருத்தி திட்டங்களையும் யாழ்ப்பாணம். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் சர்வோதய இயக்கத்தின் செயல்திட்டப் பணிப்பாளர் எஸ் வீ.சங்கரப்பிள்ளையும் சமுகமளித்திருந்தார். (வ-77)

### பல்கலைக்கழக மாணவர்கள்

## வகுப்புப் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

தமது விடுதலைகோரிசிறைகளில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளுக்குஆதரவுதெரிவித்தும், அவர்களின் விடுதலையை விரைவுபடுத்தும் முகமாகவும் நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மு.ப 10மணிமுதல் அனைத்துப்பீட மாணவர்களும் வகுப்புக்களை விட்டு வெளியேறி விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்:

இதேவேளை, பல்கலைக்கழக அலுவலகப் பணிகள் வழமைபோல் இடம்பெற்றன. (உ-6)

## பரிசளிப்பு விழா

யாழ் இந்து சமயப்பேரவையின் சைவச் சிறுவர் இல்ல பரிசளிப்பு விழாவும் நவராத்திரி விழாவும் நாளை பி.ப. 4 மணிக்கு ஏழாலையில் அமைந்துள்ள சைவச் சிறுவர் இல்லத்தில் அருட்கவி சீ விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-10)

## நெசவுத் தொழிலுக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த நெசவுத் தொழிலாளர்கள் மற்றும் நெசவுத் தொழிலைச் செய்ய விரும்புகிறவர்களிற்கும் தனியார் நிறுவனம் ஒன்று வேலைவாய்ப்பை வழங்கவுள்ளது

எனவே, எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ் மாவட்ட(செயலக) தொழில் துறைத் திணைக்களத்தில் இது தொடர்பாக தொடர்பு கொள்ளும் படி கேட்கப்பட்டுள்ளனர்:

(உ-6)

## தீவகத்தில் சுகாதார சேவை விருத்தி

(சுதுமலை)

தீவுப்பகுதியில் சுகாதார சேவையை அபிவிருத்தி செய்யு நோக்கில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், இப்பகுதிகளைச்சேர்ந்த 20 சுகாதாரத் தொண்டர்களிற்கு எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை பயிற்சி வகுப்பு நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு பேரூ நிறுவனம் அனுசரணை வழங்க உள்ளது

இப்பயிற்சி வகுப்பில் தாய், சேய் நலம், தொற்று நோய் கட்டுப்பாடு, சுற்றாடல் சுகாதாரம், உள நலச் சுகாதாரம் போன்ற அடிப்படை விடயங்களில் பயிற்சி வழங்கப்பட உள்ளது

கடந்த மாதம் ஊர்காவற்துறைப் பகுதியில் உள்ள மெலிஞ்சிமுனைப் பகுதியில் வாந்திபேதி தாக்கம் ஏற்பட்டு இரண்டு பேர் மரணம் அடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

(உ-252)

### இடைக்கால நிர்வாகம் ஏற்பட்டால்

## தமிழீழ காவல்துறையின் பணிகள் விஸ்தரிக்கப்படும்

### பொறுப்பாளர் ஜி. நடேசன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டால், தமிழீழ காவல் துறையின் பணிகள் விஸ்தரிக்கப்படுமெனதமிழீழக் காவல்துறையின் பொறுப்பாளர் ஜி. நடேசன் தெரிவித்துள்ளார்.

தற்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் 17 காவல்துறை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கோரி, 1970 ஆம் ஆண்டில் தமது ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த தமிழீழ விடுதலைப்புலிகள்,

1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதியன்று காவல் துறையின் முதலாவது நிலையத்தை அமைத்தனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அன்று தொடக்கம் இன்று வரை தமிழீழ காவல் துறையினர் மக்களுக்கு சிறந்த சேவைகளை செய்து வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

### தனியார் மயமாக்கலை எதிர்த்து

## யாழ். செயலகம் முன்பாக நேற்று மறியல் போர்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தனியார் மயமாக்கல் கொள்கையை எதிர்த்து நேற்று யாழ் செயலகம் முன் அரைமணி நேர அடையாள மறியல் போராட்டம் இடம் பெற்றது.

ஐக்கிய சோசலிஸக் கட்சியின் ஏற்பாட்டில் காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரை இடம் பெற்ற இந்த அடையாள மறியல் போரினால் செயலக ஊழியர்கள் காலை 9.00 மணி வரை வாயிலில் காத்து நின்றனர்.

அங்கு அலுவல் நிமிர்த்தம் வந்த பொது, மக்களும் காத்து நின்றமையை அவதானிக்க முடிந்தது.

இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான கட்சி ஆதரவாளர்கள் மற்றும் தனியார் மயமாக்கல் கொள்கை அதிருப்தியாளர்கள், பொது அமைப்புக்களின், பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

போராட்ட முடிவில், ஐக்கிய சோசலிஸக் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் எஸ்.தேவதாசனால் அரசாங்க அதிபர் எஸ்.பத்மநாதனூடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

(உ-6)

## கைப் பணிப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையினால் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெல்லியடியில் கைப்பணிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ-6)

### மாகாண மட்ட

புனிதசேவியர் ஆண்கள் பாடசாலை.

### முத்திரை சேகரித்தல் போட்டி

முதலாமிடம்:-

எஸ். சுரேந்திரா- புற்றளை மகாவித்தியாலயம்,

இரண்டாமிடம்:-

மாதங்கி ஜீவபாலன்- புற்றளை மகாவித்தியாலயம்.

(உ)

## நீதிமன்றில் ஆஜராக கைதிகள் மறுப்பு

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலைக் கைதிகள் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவருவதனால், அவர்களை குறித்த தினத்தில் நீதிமன்றில் ஆஜர்படுத்த முடியாது உள்ளதாக களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். பி சந்திரசேனதெரிவித்துள்ளார்.

இருந்தபோதும், குறித்த திகதியில் அவர்களை ஆஜர் படுத்துவதற்காக முற்பட்ட வேளையில் அதனைக் கைதிகள் நிராகரித்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

### போதைப்பொருள் கடத்தினாராம்

## இலங்கையரை நாடுகடத்த கனடா நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட இலங்கையைச்சேர்ந்த வே. புஷ்பநாதன் என்பவரை நாடுகடத்த கனடாவின் சமஷ்டி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர் மனிதகுலத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் என்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டமைக்கு உறுதியான தடயங்கள்இருப்பதாகவும் அந்நாட்டு சமஷ்டி நீதிமன்றம் தெரிவித்துள்ளது:

கனடா நீதிமன்றத்தின் இந்தத்தீர்ப்பைதொடர்ந்துஅவர் இலங்கைக்கு நாடுகடத்தப்படுவது உறுதியாகியுள்ளதாக கனடாவின் குடிவரவுதிணைக்கள பேச்சாளர் டானிலிசஜின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கைகுறித்து தமதுதிணைக்களம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-3)

## நிவாரணவிநியோகத்தைநிறுத்தவேண்டாம்
## சாவ. கைத்தொழில் வணிகர் மன்றம்
# அமைச்சர்ஜயலத்துக்கு அவசரகடிதம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற உறுப்பினர்களின், சேதமடைந்த வீடுகளுக்கான நஷ்டஈட்டுத் தொகை அரசினால் வழங்கப்படும் வரை அவர்களுக்கு தற்போது மாதாந்தம் வழங்கப்படுகின்றஉலர் உணவுவிநியோகத்தினை நிறுத்த வேண்டாம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு நேற்றைய தினம் அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்றத்தின் தலைவர் பி. என். சற்குணராஜா செயலாளர்டாக்டர்எஸ். எஸ். அருளானந்தம் ஆகியோரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தென்மராட்சியில் 2000ஆம் ஆண்டுமே மாதத்தில் இடம் பெற்றயுத்தத்தின்காரணமாக சாவகச்சேரி நகரத்தில் வர்த்தக நிறுவனங்களை நடாத்தி வந்த அதன் உரிமையாளர்கள் பெரும் நஷ்டங்களையும், இழப்புகளையும் எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் காரணமாக சுமார் 52 வர்த்தகர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானமுள்ளவர்கள் என்ற அடிப்படையில்உலர் உணவு வழங்கப்படுகின்றது

ஆயினும், தற்போது வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு கிராம சேவையாளர்கள் மூலம் வழங்கப்படும் நஷ்டஈட்டுப் படிவத்தினைஇவ்விதம்பாதிக்கப்பட்டவர்த்தகர்களுக்கு வழங்குவதற்கு கிராம சேவையாளர்கள் பின்னடித்து வருகின்றனர்.

அத்துடன், நஷ்டஈட்டுப்படிவங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கும் போதுஉலர் உணவு பெறுகின்ற நிவாரண அட்டைகளை திரும்ப ஒப்படைக்கும் பட்சத்திலேயே பூர்த்தி செய்யப்பட்ட நஷ்டஈட்டுப் படிவத்தைத் தாம் பெறமுடியும் என கிராம சேவையாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறிப்பிட்டவர்த்தகர்கள் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகியுள்ளனர், எனவேபாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்குத் தொடர்ந்து நிவாரண உதவி கிடைக்க உரிய வழிவகைகளைக் செய்யும் படி அம்மகஜரில் கோரியுள்ளனர்.

அம்மகஜரின் பிரதிகள், பிரதமர் ரணில்விக்கிரமசிங்க, இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்மற்றும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(உ-77)

## போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

உதவிமருத்துவ அதிகாரிகளின வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகஉதவி மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பஹிந்தலியனகே தெரிவித்துள்ளார்.

இதனால் நாட்டிலுள்ள 974 அரசாங்கமருத்துவமனைகளின் சேவைகள்பாதிக்கப்பட்டுள்ளன.

சங்கம் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் தொடர்பாக அரசு இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. (உ-8)

## ஆசிரியர் சங்கங்களினால் 24 கோரிக்கைகள் கல்வி அமைச்சிடம் முன்வைப்பு

(உடுவில்)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இலங்கை ஆசிரியர் சங்கமும் ஏனைய பதினொரு ஆசிரிய சங்கங்களும் இணைந்து மாபெரும ஊர்வலத்தையும் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் கூட்டத்தையும் நடத்தின.

இக்கூட்டத்தில் பின்வரும் கோரிக்கைகள் கல்வி அமைச்சிடம் முன்வைக்கப்பட்டன.

● இலங்கை ஆசிரிய சேவை ஆரம்பிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகியும் இதுவரை இலங்கை ஆசிரிய சேவையில் உள்வாங்கப் படாமலிருக்கும் ஆசிரியர்களை உள்வாங்கி அவர்களுக்கான பதவி உயர்வும் சமபளமும் வழங்கப்பட வேண்டும்.

● தொண்டர் ஆசிரியர் பகுதிநேர ஆங்கில ஆசிரியரில் தகுதியானோருக்கு உடனடி நியமனம் வழங்கப்பட வேண்டும்.

● ''அக்ரகார'' கொடுப்பனவுகளை வழங்குவதற்கு உடனடி நியமனம் வழங்கப்படவேண்டும்.

● இடவுதவிக்கடன், சம்பளக்கடன் வழங்குவதிலுள்ள தாமதங்கள் நீக்கப்பட வேண்டும்.

● யுத்தப்பிரதேசங்களில் வீடுகளை இழந்த ஆசிரியர்களுக்கு புனர் நிர்மணத்துக்காக சலுகை வட்டியில் கடன் வழங்கல வேண்டும.

● புதிய சம்பள அதிகரிப்பு அமுலுக்கு வரும்வரை அதிகரித்த வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்த சம்பளத்துடன் 5 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும்.

● 'எக்கநாயக்கா கமிஷன்' சிபார்சுகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

● புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத்துக்குப் பதிலாக சேமலாப நிதி வழங்கும் திட்டத்தை கைவிட வேண்டும்.

இவை உள்ளிட்ட 24கோரிக்கைகள் கல்வி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டன.

(உ-261)

## தனியார் மயமாக்கலை எதிர்த்து
## எதிர்க்கட்சிகள் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தினால் மேற்கொண்டுவரும் தனியார்மயப்படுத்தல் கொள்கைமற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுதல், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றினை எதிர்த்து நேற்று நண்பகல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை எதிர்க்கட்சிகள் நடத்தியுள்ளன.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள மக்கள்வங்கி தலைமையகத்துக்கு முன்னால் ஆரம்பமாகிய இவ் எதிர்ப்புஊர்வலம் கோட்டை ரயில்நிலையத்துக்குமுன்னால் முடிவடைந்தது.

இவ் எதிர்ப்புஆர்ப்பாட்டத்தில் 12 எதிர்க்கட்சிகளை சேர்ந்த 86 தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டன.

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட பல முக்கிய அரசியல்பிரமுகர்கள் இதில் கலந்துகொண்டனர்.

(உ-8)

## குடாநாட்டில் சுமார் ஒன்றரை இலட்சம் குடும்பங்கள்

(மானிப்பாய்)

யாழ். குடா நாட்டின் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் திரட்டப்பட்ட புள்ளி விபரங்களின்படி, கடந்த யூன்மாதம் வரையில் யாழ். மாவட்டத்தில் 1இலட்சத்து 52ஆயிரத்து 441 குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து 31 ஆயிரத்து 901 பேர் வசித்துவருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(உ-232)

# கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ். அலுவலக பணிகள்மந்தகதியில்

(தென்மராட்சி)

கைத்தொழில்அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட முகாமையாளர் தொழில்நுட்ப வியலாளர் மற்றும் விஸ்தரிப்பு அலுவலர்கள் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் நீண்ட காலமாகஇருந்துவருகின்றன.

இதன்காரணமாக சபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு சிரமங்கள்எதிர்நோக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

அத்துடன், சபையினால் நடத்தப் படக்கூடிய கைத்தொழில் பயிற்சிகளை முன்னெடுப்பதற்கான நிதிவசதியோ அல்லது உபகரண வசதியோ இல்லாதநிலைதொடர்ந்தும் காணப்படுகிறது.

இதேவேளை, மாவட்ட அலுவலகத்திற்கு கணனிகள் மற்றும் வாகன வசதிகளும் இல்லாமல் இருப்பது பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அச்சுவேலியில்இச்சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிய கைத்தொழில் பேட்டையில் முன்பு 36 வகைப்பட்ட கைத்தொழில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போது சபையினால் எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அறியப் படுகிறது.

(உ-77)

## நவராத்திரி பாமாலை
### (மூன்றாம் நாள்)



## சக்தியைப் போற்றுவோம்

துர்க்கையாய் திருமகளாய்க் கலைமகளாய்
துணிவு செல்வம் கல்வி தரும் சக்தி அம்மா!

ஒருகோடி சந்திரனின் ஒளியானாய்
உலகாளும் மீனாட்சி வடிவானாய்
கருவாகி உருவாகி நமைக்காத்தாய்
காலமெல்லாம் எங்களுக்கு துணையானாய்.

நாதத்தின் கலந்திட்ட இசையானாய்
நானென்ற மமதைக்கு எதிரானாய்
வேதங்கள் விரிக்கின்ற பெருளானாய்
வேதனை தீர்க்கின்ற மருந்தானாய்.

தி.ஜெகஜீவன்ராம்
யாழ். வேலாயுதம் மகாவித்தியாலயம்
பருத்தித்துறை

## தேவியே சரணம் அம்மா!

அன்னையாய் அன்பு நிறை சக்தியாய்
அவனியில் ஆதரிப்பவளே
கண்களோராயிரம் கொண்டு –மேதினியில்
கருணை புரிபவளே
மூவகை நிலைகளில் முப்பெருந் தேவியாய்
தோற்றங்கள் கொடுப்பவளே
புவியெல்லாம் உய்திபெற நலமனைத்தும் நல்கும்
தேவியே சரணம் அம்மா!

கார்த்திகா பாலசுப்பிரமணியம்
வேம்படி மகளிர் கல்லூரி

## துர்க்கையே அருள்வாய்

துர்க்கா தேவி துர்க்கா தேவி
துன்பங்கள் யாவும் துரத்திடுவாய்
நிர்க்கதியாய் நாம் நிற்கிறோம்— தாயே
நிலையான இன்பம் தருவாயம்மா
சர்க்கரைப் பொங்கலுடன் சகலமும்படைத்து
சன்நிதி தேடி சந்தித்து நிற்கிறோம்
துர்க்கை அம்மாளே துணைசெய்ய வேண்டி
துதிக்கின்றோம் எமக்கு வரமருள்வாய்

வீரத்தின் தெய்வமே வரமருள் துர்க்கா
தீரத்தில் நாயகியே; தந்திடுவாய் உன்அருளை
சூரத்தனங்கள் எல்லாம் சங்கரித்து நீயே
ஈரத்துடன் அருளை தந்திடுவாய் அம்மா.

சிந்துஜா கணேசலிங்கம்
யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை

## கலியுகத்தில் அருளிடம்மா!

நாலடியில் பாட்டெழுதி நானுனக்குத் தந்திடுவேன்
கோலமிட்டு விளக்குடனே அர்ச்சனை செய்திடுவேன்
மலைமகளே!; அலைமகளே: கலைமகளே; முத்தேவியரே
வீரமுடன் செல்வமும் கல்வியும் கலியுகத்தில்
அருளிடம்மா!

சி.திருச்செந்தூரன்
யாழ். நெ. ம. ம. வி
12 A

# அடிமைகளும், எஜமானர்களும் உருவாகுவதற்கு உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியே காரணம்

பேராசிரியர்
பி. சந்திரசேகரம்
(இலண்டன்)

புதிய உற்பத்திக்கு கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டதனால் எவ்வாறு உபரி உற்பத்தி சாத்தியமாகியது என்பதையும் அதன் காரணமாகப் பூர்வீகக் குடிகளின் பொதுவுடமை சமூகம் எவ்வாறு தகர்க்கப்பட்டது என்பதையும் நாம் கண்டுள்ளோம். மனிதனுக்கு உபரி உற்பத்தி செய்யும் திறமை ஏற்பட்டதும் பலரை அடக்கி அவர்களின் உழைப்பைச் சுரண்ட சிலர் முயன்றனர். பண்டையகாலங்களில் பூர்வீகக் குடிகளுக்கிடையே நடைபெற்ற யுத்தங்களில் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களைக்கொன்று விடும் பழக்கமிருந்தது. ஏனென்றால் கைதானவர்களைக் கொன்று விடாமல் நிர்ப்பந்தமாக வேலை செய்யவைத்தாலும் உற்பத்திக் கருவிகள் வளர்ச்சியடையாத அன்றைய நிலையில் அவர்களின் உழைப்பின் மூலம் மிச்சம் கிடைக்காது. ஆனால் காலஞ் செல்லச் செல்ல உற்பத்திக் கருவிகளில் முன்னேற்றம் ஏற்பட்ட காரணத்தால் அவ்வாறு யுத்தக் கைதிகளை வேலை செய்ய வைப்பதன மூலமாகமிச்சம் காணமுடியும் என்ற நிலைமை ஏற்பட்டது.

ஆகவே போர்களில் கைது செய்யப்பட்டவர்கள் அடிமைகளாக மாற்றப்பட்டனர். அவர்கள் எஜமானர்களுக்காக வேலை செய்ய வேண்டும். அவர்களை விற்கவும், வாங்கவும் கொல்லவும் எஜமானர்களுக்கு உரிமையுண்டு. இவ்வாறு அடிமைகள், எஜமானர்கள் என்ற இரண்டு வர்க்கங்கள் முதன் முதலாகச் சமுதாயத்தில் தோன்றின. அடிமைகளும் எஜமானர்களும் என்ற இந்தப் புதிய சமூக அமைப்பு இந்தப் புதிய உற்பத்தி உறவு அன்று இருந்த உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு ஏற்ப அமைந்திருந்தது. கல் ஆயுதங்களும், வில் அம்புகளும் மறைந்தன. உலோக ஆயுதங்கள் தோன்றின. கால் நடைகளை வளர்த்துப் புல்வெளி மைதானங்களைத் தேடிப்போகும் நிலைமை மாறி விவசாயத்தையும் கைத்தொழிலையும் பிரதானமாகக் கொண்ட நிலைமை ஏற்பட்டது. இந்தப் புதிய உற்பத்தி முறை உற்பத்தியை மேலும் அதிகரிக்கச் செய்தது. இதனைத் தொடர்ந்து புதிய வேலைப் பிரிவினைகளும் தோன்றின. தவிரவும் இதன் விளைவாக விற்பனை செய்யும் நோக்கத்துடன் பொருள்களை உற்பத்தி செய்யும் நிலைமையும் ஏற்பட்டது. இது குறிப்பிடத்தக்க ஒரு புதிய அம்சம். இது வரை தன் உபயோகத்திற்கு மட்டும் உற்பத்தி செய்து வந்த மனிதன், இப்பொழுது பிறரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் விற்பனைக்காகப் பல பண்டங்களையும் உற்பத்தி செய்யத் தொடங்கினான்.

### தொழிற்துறைவளர்ச்சி

அழிவிலிருந்தும் பட்டினியிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளச் சர்வசாதா இயற்கையோடும் வனவிலங்குகளோடும் போராடிக் கொண்டிருந்த புராதன மனிதன் நாகரிகத்தின் சுவையை அறியவில்லை. ஆனால அடிமை சமூகத்தில் உற்பத்தி அதிகரித்துச் செல்வம் குவிந்தது. புதிய பெரும் நகரங்கள் ஏற்பட்டன. பாசனத்திட்டங்கள் நிறைவேறப்பட்டன. கைத்தொழில் வளர்ந்தது. சுரங்கத் தொழிலும், கப்பல் தொழிலும் வியாபாரமும் ஆங்காங்கே தோன்றின. மிலேச்சத்தனமான காட்டுமிரண்டி வாழ்கையை விட இது மிகப்பெரும் முன்னேற்றம் என்பதில் ஐயமில்லை. ஆனால் புராதன கம்யூனிய சமுதாயத்தில் தனியுடைமையும் வர்க்க வித்தியாசமும் இருந்ததில்லை. உற்பத்திக் கருவிகளைத் தனியுடைமை ஆக்க வேண்டும் என்ற எண்ணமே எழவில்லை ஒருவர் பிறரைச் சுரண்டுவதற்கும் இடமில்லை. ஆனால் அடிமை சமூகத்தில் அடிமையும்,உற்பத்திக் கருவிகளும் செல்வம் ஆகிய எல்லாம் எஜமானர்களுக்குச் சொந்தம் அடிமைகளோ ஆடுமாடுகளைப் போல் நடத்தப்பட்டனர்.உரிமை பெற்ற எஜமானர்கள் உரிமையற்ற அடிமைகள் என்ற முரண்பட்ட இந்த இரண்டு வர்க்கங்களுக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டன. அக்கால வரலாற்றில் அடிமைகளால் நடத்தப்பட்டபுரட்சிக் கலங்கள் ஏராளம்இந்த கிளர்ச்சிகள் அடிமை சமூகத்தையே கிகிடுக்கச் செய்தன.

### இந்தியாவிலும் அடிமைகள்

மற்றெந்த நாட்டையும் போலவே இந்தியாவிலும் அடிமைச் சமுதாயம் இருந்ததற்கு சரித்திரத்தில் பல சான்றுகளைக் காணலாம். மனுஸ்மிகுதியில் அடிமைகளை நடத்த வேண்டிய முறைகளைப் பற்றிய பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. தவறிழைத்த அடிமைக்கு என்ன தண்டனை. அடிமையின் வேலை என்ன விடுதலை பெறுவதற்கு என்ன நிபந்தனை என்பன பற்றியெல்லாம் மனுஸ்மிகுதியில் கூறப்பட்டுள்ளது.

அன்று இந்தியாவில் இருந்த அரசர்கள் ஏராளமாக அடிமைகளை வைத்திருந்தனர். யுதத்தில் கைதானவர்களை அடிமைகளாக்கினர்.பெரிய நீர்ப்பாசனத்திட்ட வேலைகளிலும் கோட்டை கொத்தளங்கள் கட்டுவதிலும் கோவில்கள் கட்டுவதிலும் அடிமைகளை ஈடுபடுத்தினர். விவசாயத்துறையிலும் இந்தியாவின் பல பகுதிகளிலும் அடிமைகளை ஈடுபடுத்திய சம்பவங்களை வரலாற்றில் காணலாம். கிறிஸ்துபிறப் பிற்கு முன்னர் ஐந்தாம்நூற்றாண்டு வரை இந்தியாவின் பல பகுதிகளில் அடிமைகள் இருந்ததாகத் தெரியவருகிறது. புத்தமதக் கோட்பாடுகள் அடிமைமுறையை எதிர்த்து நடைபெற்ற சிந்தாந்தப் போராட்டத்தைக் குறிக்கிறது. என்று கூறுவது மிகையாகது.

ஐரோப்பாவில் ஏற்பட்ட முறையில் இங்கு சமூகமாறுதல்கள் ஏற்படவில்லையென்றும் இந்தியாவின்சமூக வளர்ச்சிப்பாதை தனி என்றும் சில இந்திய சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒவ்வொரு நாட்டிற்கும்சில தனிச் சிறப்புகளும் குணாதிசயங்களும் வளர்ந்திருந்தது.ரோமபுரியிலும் ஐரோப்பாவிலும் சில பல இடங்களிலும் வளர்ந்திருந்தது போன்ற அதே விதமான அடிமைமுறை இந்தியாவில் ஏற்படவில்லையென்பது உண்மையே. மற்றச சில தேசங்களைப போல விவசாயத்திலும் கப்பல் தொழில் சுரங்கத் தொழில் கைத்தொழில் போன்ற நிறுவனங்களில் ஏராளமாக அடிமைகள் இந்தியாவில் உபயோகப்படுத்தப்படவில்லை என்பதும் வாஸ்தவமே. இருந்த போதிலும் அடிமை சமூகத்தின் பொது நிர்ணயிப்பும், அக்காலத்தில் இருந்த உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகள் போன்றவைகளும் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். மார்க்ஸ் சமூக வளர்ச்சி பற்றிக் கூறும் நியதிகள் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்.

### முதலாளித்துவமும் சோஷலிஸமும்

ஒவ்வொரு நாட்டிலும் ஒரே காலத்திலும் ஒரே முறையிலும் இந்த மாறுதல்கள் தோன்றவில்லை ஆசியாவில் தான் மனிதன் முதன் முதலில் தோன்றினான். புராதன கம்யூனிச சமுதாயமும் இங்கே தோன்றியது. ஆனாலும் அடிமை அமைப்பின் சிகரம் போல் விளங்கிய கிரேக்க நாகரிகமும் நிலப் பிரபுத்துவத்தின் முன்னோடிகளாக அமைந்த பிரிட்டனும் பிரான்சும் இவ் விடயத்தில் இந்தியாவை பின் தள்ளி முன்னேறின் பெருந் தொழிற்சாலைகள் அமைத்து முதலாளித்துவம் வளர்ச்சியடைந்ததும் தொழிலாளிவர்க்க இயக்கம் ஆரம்பித்ததும் முதன் முதலாக சோஷலிசம் ஏற்பட்டதும் ஐரோப்பாவில்தான் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இவ்வாறான ஏற்றத் தாழ்வான வளர்ச்சிப் போக்கு இருந்த போதிலும் சமூக மாறுதல்களின் அடிப்படை நியதிகள் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் என்பதை நாம் பார்க்கத் தவறக் கூடாது. இங்கிலாந்தில், பிரான்சு இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டது போலுள்ள மாறுதல்கள் இங்கு ஏற்படவில்லை. புராதான கம்யூனிஸ அமைப்பு தகர்ந்ததும் அந்த நாடுகளில் நிலம் தனியுடமை ஆக்கப்பட்டது. ஆனால் தனியுடைமையும் வர்க்கங்களும் தோன்றிய பிறகும் இந்தியாவில் நிலம் பொதுபாரமரிப்பில் பல நூற்றாண்டுகள் இருந்தது. நிலத்தில் பயிர் செய்யும் உரிமை மக்களுக்கு இருந்தது. அவர்கள் அரசனுக்கு விளைச்சலின் ஒரு பகுதியைக் கப்பமாக கொடுக்க வேண்டியிருந்தது. நிலத்தை தனதாக்கி கொள்ள அரசர்கள் முயன்ற போதொல்லாம் மக்கள் அம் முயற்சியை எதிர்த்து வெற்றிகரமாகப் போராடினார்கள்.

### வருணாஸ்ரமம்

இந்தியாவில் அன்று இருந்த சமூக அமைப்பின் அடிப்படையாக வர்ணஸ்ரம தர்மம் விளங்கியது. அக்காலத்தில் நிலவிய வர்க்கப் பிரிவுகளையே இந்த முறை எடுத்து காட்டுகிறது. பிராமணன் வேதம் ஓதுவான் தெய்வவழிபாடு நடத்துவான். சஷ்த்திரியன் ஆட்சியை நடத்துவான். நாட்டைப்பாதுகாப்பான். இவை தங்களது பெருங்கடமைகள் என்று சொல்லிக்கொண்டு இவர்கள் பிறர் உழைப்பைச் சுரண்டி வாழ்ந்தனர். இந்தக் கொடுமைகளை எதிர்த்து க்டுமையான வர்க்கப் போராட்டங்கள், உரிமைப் போராட்டங்கள் அக்காலத்தில் நடைபெற்றன. கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சி பாசனத்திட்டங்கள் வியாபார முன்னேற்றம் முதலிய உற்பத்தி சாதனங்களில் தோன்றிய முன்னேற்றம் பழைய உற்பத்தி உறவுகளை மாற்ற வேண்டும் என்ற நிலைமையை உருவாக்கியது. சமூகத்தில் அன்று நடைபெற்ற மோதல்கள் இதை எடுத்துக் காட்டின. அடிமை எஜமானன் என்ற உறவில் மாற்றம் ஏற்பட்டு புதிய உற்பத்தி உறவுகள் ஏற்பட்டதால் இந்தியாவில் கொடுமையான வர்க்கப் போராட்டங்கள் நடைபெற்ற ஒரு கட்டம் இது. வர்க்கப் போராட்டங்கள்அக் காலத்தில் இருந்ததில்லையென்றும் நாட்டின் பொற் காலம் என்றும் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

அரசன் பொது நிலத்தைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாமா? அரசாங்கச் செலவுக்கு இவ்வளவு பணம் செலவழிக்கப்பட வேண்டுமா? விவசாயிகள் இவ்வளவு வரி செலுத்த வேண்டுமா? என்பன போன்ற பல முக்கியமான பிரச்சினைகள் உடைமை வர்க்கத்திற்கும் உழைப்பாளிகளுக்குமிடையே கடுமையான போராட்டங்கள் அக்காலத்தில் நடைபெற்றன. இவ்வாறு போராட்டங்கள் நடத்தல் தான் முன்னேற்றம் சாத்தியமாகும் என்ற நிலைமை உருவாயிற்று. முன்னர்போலச் சவுக்கால் அடித்தும் மனித உரிமை ஆர்வத்துடன் புதிய உறபத்தி செய்யமாட்டான் என்ற நிலைமையும் ஏற்பட்டது. இதன் விளைவாக அடிமை சமுதாயம் ஒழிந்து நிலப்பிரபுத்துவம் உதயமானது. உற்பத்தி சக்திகளை மேலும் வளர்த்துச் செல்ல இது மிகவும் அவசியமாக இருந்தது.

* * *

# தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

*(நேற்றைய தொடர்ச்சி.........)*

### விவசாயம்

| | |
|---|---|
| சிவஞானம் சிவபாலமுகுந்தன் | முள்ளியவளை |
| பாலசிங்கம் கமலராஜன் | முள்ளியவளை |
| குகதாசன் பாாத்தீபன் | யோகபுரம் |
| இலியான்னாட் குருஸ்இலின்மாரியா | வங்காலை |
| நடராஜா ஜெயசுதா | ஒட்டுசுட்டான் |
| இஸ்மாய் சமின் உமீமா | சம்மாந்துறை |
| முகமட்கலீபா முகமட்சல்பிகார் | கொக்கரவா |
| அழகேஸ்வரி கணபதிப்பிள்ளை | காரைதீவு - 5 |
| சுப்பிரமணியம் சங்கீதராஜன் | மட்டக்களப்பு |
| பத்மநாதன் கமலப்பிரதீபா | மட்டக்களப்பு |
| நல்லதம்பி கோகிலவாணி | பளுகாமம் |
| அருள்ராஜா சுபோதினி | களுவாஞ்சிக்குடி |
| குணபாலா மஞ்சுளா | களுவாஞ்சிக்குடி |
| வேலுப்பிள்ளை விஜயபாவா | காரைதீவு - 7 |
| தம்பிலெபி ருவாய்ஸ் | இறக்காமம் - 3 |
| கனகரத்தினம் வேர்யினியப்பிரசாந்தி | மட்டக்களப்பு |
| தெய்வநாயகம் தவநாயகம் | களுவாஞ்சிக்குடி |
| ஜோன்பிள்ளை மேவின் | பெரியகல்லாறு-3 |
| தர்மரட்ணம் சுகந்தினி | களுதாவள்ளை-2 |
| சயினுள் அப்டீன் அப்துல்ஹகீம் | அக்கரைப்பற்று-6 |
| தயாபரன் தர்மசீலன் | களுவாஞ்சிக்குடி |
| சின்னராஜா சிறிக்காந்தன் | பெரியபுரதீவு |
| சர்டீன் அப்துல் சலீம் | சாமாந்துறை-4 |
| கந்தையா சிவமலர் | பெரியபுர தீவு |
| புகலேந்திரன் பிரசன்யா | குரமண்வேலி-12 |
| அதம்பாவா ரீசானா | மருதமுனை - 3 |
| ஆனந்தராசா தனுஷியா | காரைதீவு - 8 |
| செல்வராஜா பிரசாந்தினி | கல்முனை |
| மகேஸ்வரன் உகந்தேஷ் | கல்முனை - 2 |
| முகமட் இஸ்மில் முகமட் முஸ்தாகீம் | நிந்தவூர் -18 |
| அருணாசலம் குகப்பிரியா | மட்டக்களப்பு |
| காரலசிங்கம் காண்டீபன் | களுவாஞ்சிக்குடி |
| லோகநாயகம் சந்திரபவன் | தம்பிலிவில்-2 |
| அருணாசலம் நிலேந்திரிக்கா | கல்முனை |
| வல்லிபுரம் ஏனுகோபன் | பெரியபுரதீவு |
| காசுபதி பானுமதி | அக்கரைப்பற்று-7 |
| கணேசதுரை ஜெயச்சந்திரா | தம்பிலிவில் -1 |
| விஸ்வலிங்கம் ராஜகுமாரி | குருக்கள் மடம் |
| சிவஞானம் ராஜினி | கல்முனை - 1 |
| கணபதிப்பிள்ளை மோகனராஜா | காரைதீவு - 1 |
| துளசிநாதன் குகப்பிரியன் | செங்கலடி |
| விகாலி சிவலிங்கம் | அக்கரைப்பற்று |
| கனகசிங்கம் பிரமேகாந்தன் | களுவாஞ்சிக்குடி |
| அதம்பாவா பைசால் | சாமாந்துறை-10 |
| கீதரன் அம்பிகாபதி | அக்கரைப்பற்று |
| இனியப்பிள்ளை நப்சன் | புல்மோட்டை |
| அதம்பாவா ரியாஸ் | பள்முனை - 1 |
| நவநாயகமூர்த்தி பிரசன்னா | அக்கரைப்பற்று |
| அப்துல் காபூர் முகமட் யார்சீஸ் | மருதமுனை - 6 |
| வரதராஜன் சுயன் | கல்முனை - 2 |
| மன்சூர் முகமட் சுதாத் | மூதூர் - 1 |
| இப்ரலெப் முகமட் தமீன் | மருதமுனை |
| துரையப்பா பாலசுந்தரம் | அக்கரைப்பற்று-8 |
| பரமலிங்கம் மோகனதாஸ் | காரைதீவு - 3 |
| அப்துல் மயீட் யவ்வாரீ | ஏறாவூர் - 3 |
| சுவசுந்தரம் சுசிரேய் | கிரான்குளம் - 7 |
| தங்கவடிவேல் தனிச்செல்வம் | காரைதீவு - 4 |
| பெரியதம்பி ரஞ்சன் | கல்முனை |
| சேம்பன் விஜயகுமார் | களுவாஞ்சிக்குடி |
| கிருஸ்ணப்பிள்ளை சசிகரன் | செங்கலடி |
| ரகுபாலன் சசிக்குமார் | களுவாஞ்சிக்குடி |
| லியானாட் குரூஸ் யூலீன் | வங்காலை |
| ஜெயதாஸ் மரியநேசன் மிரண்டா | மன்னார் |

### நூலக விஞ்ஞானம்

| | |
|---|---|
| பாலசுந்தரம் கிருஷாந்தினி | மட்டக்களப்பு |
| பாஸ்கரன் அனித்தா | வவுனியா |
| தேவாஞ்சலி தர்மலிங்கம் | வவுனியா |
| பவளறஞ்சினி சண்முகலிங்கம் | வவுனியா |
| டில்ருக்சி விஜயவர்த்தனா | பற்றியக்கெடற |
| ராஜகோபால் ஜெயதிரி | புத்தளம் |
| பி.ஜி.ஆர்.எச்.இனோகா குமாரி | குருநாகல் |
| குடகமகே அறோசா நிலந்திமாலா | அகான்கம |
| பிகாம்பிய லியானோகே கஜானி | இலுக்கட்டிய |
| அசுரபுலிகே சதுராங்கனி இகனநாயக்கா | கொறும்பாவ |
| முடியன் செலலேக் சொமாவதி | பற்றியக்கெடற |
| யோகேஸ்வரி அமரதுங்க | வாஞ்சவலா |
| டுனற்றனமெனிக் | டொம்பகவெல |
| சிவனாந்தராஜன் ராதிகா | பெரியகல்லாறு 1 |
| பிரதீப் உஷான்பீற்றர் | கொழும்பு 15 |
| சண்முகநாதன் சபாநந்தன் | சிலாபம் |
| சின்னையாகுமாரவேலு குலசிங்கநாதன் | மாகோ |
| அருளானந்தம் பிரசாந்த் | மட்டக்களப்பு |
| யோசாப் பல்சதார் எம்கேயித் | மட்டக்களப்பு |
| ஆனந்தகுமார் மோகனகாந் | திருகோணமலை |
| யு.உதயச்சந்திரன் | திருகோணமலை. |

# இன்று ஒரு. தகவல்

## உதவும் உள்மன ஆற்றல்

ஒரு விஞ்ஞானி இருந்தார் அவர்பெயர் 'ஹோ' ஓர் ஊசியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பது அவர் நோக்கம் அதற்காக அவர் வெகுகாலம் ஆராய்ச்சி செய்தார். இருந்தாலும் அதைக் கண்டுபிடிப்பது அவருக்கு இயலாத காரியமாகவேயிருந்து வந்தது. அப்படி என்ன அபூர்வமான ஊசிஅது? வேறொன்றுமில்லை. இன்றைக்கு தையல் இயந்திரங்களில் உபயோகப்படுகிறதல்லவா? அந்த ஊசிதான்.

அதில் அவருக்குநீண்ட காலமாக பிடிபடாமல் இருந்த ஒரு விஷயம்...அந்த ஊசியின் கூர்மையான பாகத்தில் நூலை எப்படிச் சேர்ப்பது? என்பது தான் மற்றஒருபாகம் இயந்திரத்தின் உள்ளே போய் விடுகிறது...எனவே அந்தப் பகுதியில் சாதாரண மற்ற ஊசியில் செய்வது போல நூலை நுழைக்க முடியாது. அப்படியே நுழைத்தாலும் தைப்பது எப்படி சாத்தியமாகும்? இதுதான் அவருக்கு இருந்த பிரச்சினை!

வெகுநாட்கள் யோசனை பண்ணிப் பார்த்தார். தையல் மெஷின் ஊசியின்வடிவமைப்பு அவருக்குப் புலப்படவில்லை. இரவு-பகலாக அதே ஞாபகமாக இருந்தார். இந்தச் சமயத்தில்ஒருநாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு கனவு கண்டார், அது என்ன கனவு தெரியுமா? அந்தக் கனவில்-ஒரு மலைச்சாதியினர் அவரைப்பிடித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அவரைக் கொண்டுபோய் ஓர் இடத்தில் கட்டிப் போட்டு விடுகிறார்கள். அந்த மலைவாழ் மக்களின் தலைவன் ஒருவன் அங்கே வருகின்றான்.

அவரைப் பார்த்து ஓர் உத்தரவு போடுகிறான் என்ன உத்தரவு தெரியுமா?.

''பொழுது சாய்வதற்குள் நீ தையல் மெஷின் ஊசியைக் கண்டுபிடிக்கவேண்டும் அப்படிக்கண்டு பிடிக்கவில்லை என்றால் உன் தலையை வெட்டி விடுவோம்'' இதுதான் அவன்போட்ட உத்தரவு, இவருக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை. திரு திருவென்று விழிக்கிறார். இந்த நேரத்தில் மலைச்சாதியினர் அவரைச் சுற்றிவந்து - பயங்கரமாக விழித்துக் கொண்டு நடனம் ஆடுகிறார்கள், தன்னைச் சுற்றி ஆடிக் கொண்டுவருகிற அவர்களை மிகவும் அச்சத்தோடு இவர் கவனிக்கிறார். நேரம் ஆக ஆக தன்னுடைய இறுதிநேரம் நெருங்குவதை உணர்கிறார். மிகவும் நெருக்கடியான நிலைமை.

தன்னைச் சுற்றிஆடுகிறவர்களைக் கவனிக்கிறார். அவர்கள் கைகளில் ஈட்டிமாதிரி ஓர் ஆயுதம் வைத்திருக்கிறார்கள். அந்த ஆயுதத்தை இவர் கண்ணுக்கு நேராக குத்துவது போலக் கொண்டுவருகிறார்கள். அதைப்பார்க்கிறார். அந்த ஆயுதத்தின் கூரான முனையை இவர் கூர்ந்து கவனிக்கிறார். அந்தக்கூரான முனையில் ஒரு சின்னத்துவாரம் தெரிகிறது. உடனே அவருக்குள் பளிச் சென்றுஓர் ஐடியா உதயமாகிறது;

''இதைத்தானே நான் இவ்வளவு காலமும்தேடிக்கொண்டிருந்தேன். கூரான முனையில்ஒருசின்னத் துவாரத்தைப் போட்டுவிட்டால்... அதன் மூலமாக நூலைச்செலுத்தி மறுமுனையை இயந்திரத்தில் வைதது விடலாமே! தையல் இயந்திரத்துக்கான ஊசி தயார்'' என்று நினைத்தார். திடீரென்று தூக்கம் கலைந்தது, உடனே தன்தலைமாட்டில் இருந்த குறிப்பேட்டில் இதைக்குறித்து வைத்துக் கொண்டார். அதன்பிறகு அந்த ஊசியையும் அவர் செய்துமுடித்தார்;

இது எப்படிசாத்தியம்என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இது சாத்தியம் தான் விழித்துக் கொண்டிருக்கிற போது நமக்கு ஏற்படுகிற சில பிரச்சினைகளுக்கு கனவில் விடை கிடைபபது உண்டு. இளைஞர்களே! உங்களில் கூட சிலருக்கு இது மாதிரி அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். எந்த ஒரு செயலைப் பற்றி நினைக்கும் போதும் அந்தச் செயல் நம் நினைவில் ஒரு நல்ல வடிவம் பெறுகிறது.

ஒருசெயல் திட்டத்தைஎந்த அளவுக்கு நாம் நன்றாக யோசனை செய்து திட்டம் போடுகிறோமோ.. அந்த அளவுக்கு அதைச் சுலபமாகச் செய்து முடிக்க முடியும். அந்த விஞ்ஞான நினைத்த காரியம் அவரின் எண்ணம் பூராகவும் ஆக்கிரமித்தது. ஆகவே அவர் நினைத்தது கனவில் உருவாகி அதற்குச் செயல் வடிவம் கிடைத்தது. மனிதனின் உள் மனதுக்கு அவ்வளவு ஆற்றல் உண்டு. தூக்கத்தை ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்துவது எப்படி? என்பதைப் பற்றியெல்லாம் இப்போது நிறைய ஆராய்ச்சிகள் செய்கிறார்கள். பயிற்சிகள் கூடக் கொடுக்கிறார்கள். எனவே தூக்கம் அலட்சியப் படுத்த வேண்டிய ஒன்றல்ல.

நமக்கு வேண்டிய ஒருவர், அவருக்குத் தூக்கத்தில் நடக்கிற வியாதி. அதற்காகமருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவரைப் பார்த்துக் கேட்டேன் 'ஏன்... உங்கள் தூக்கத்தில் நடக்கின்றவியாதிக்கு மருந்து சாப்பிட்டீர்களே... ஏதாவது முன்னேற்றம் தெரிகிறதா? என்று. 'தெரிகிறது' என்றார் எப்படிஎன்றேன், 'முன்பென்றால் தூக்கத்தில் ஒரு 10 அடி தூரம் நடப்பேன்; இப்பொழுது 40 அடி தூரம் வரைக்கும்நடக்கிறேன் என்று சொன்னார் அவர்.

தென்கச்சி கோ.சுவரமிநாதன்

வவுனியாவில் நடைமுறைப்படுத்தப்படாத விடயங்கள் குறித்து

# வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கண்காணிப்புகுழு தலைவர் சந்திப்பு

(வவுனியா)

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் வவுனியாவில் நடைமுறைப் படுத்தப்படாத விடயங்கள் தொடர்பாக, வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், வவுனியா மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் யுக்காகொலனை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சதாசிவம் குலதேவராசா தலைமையிலான குழுவே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது

வைரவப் புளியங்குளத்தில் உள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையின் போது முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

- வவுனியா கலாசார மண்டபத்தில் இராணுவம் நிலைகொண்டிருப்பது
- வவுனியாவின் நகரத்தில் உள்ள இராணுவக்காவல் அரண்கள் அகற்றப்படாமை
- வவுனியா நெல் சந்தைப்படுத்தும் சபையில் இராணுவம் நிலைகொண்டிருப்பது
- வவுனியாவில் உள்ள பொதுக் கட்டடங்களிலும், வீடுகளிலும் இராணுவம் நிலைகொண்டிருப்பது;
- விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு சில பிரதேசங்களுக்கு செல்வதற்கு தடைவிதித்திருப்பது தொடர்பான பல்வேறு விடயங்கள் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது; (ம)

# இராசி பலன்

9-10-2002
புரட்டாதி 23, புதன்
திருதியைமு.ப 10 50வரை
விசாகம் மு.இ 8.50 வரை
இராகு காலம்- 12.02-1.32
நல்ல நேரம்-4.32- 6.02
சித்தாமிர்தம்,
சதுர்த்தி விரதம்

**மேடம்**
எதிர்பாராதஅச்சம், காரிய தாமதம், தொழில் முயற்சி பலிதம், போசனசுகம்.

**இடபம்**
அபூர்வ சந்திப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சி, ஜனவசியம், திடீர்பயணம்.

**மிதுனம்**
நோய் குணமடைதல், எடுத்த காரியம் கை கூடும் சந்தோசமான சம்பவம், குடும்ப சுகம்.

**கடகம்**
வியாபார நன்மை, இலட்சுமீகரம், உடல் நலக்குறைவு, குடும்பக் கவலை,

**சிங்கம்**
பிரயாணம், வாக்குக்கலகம், மாணவர்கள் கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம்;

**கன்னி**
அன்னியர் சந்திப்பு, தனவரவு, பிரயாண நன்மை, காரிய நன்மை.

**துலாம்**
மனச் சஞ்சலம், சயன சுகக் குறைவு, காரிய தாமதம், மாதர் நட்பு.

**விருச்சிகம்**
ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, செய்தொழில் விருத்தி, முயற்சி கை கூடும்.

**தனுசு**
உறவினர் மனஸ்தாபம், அபகீர்த்தி, தொழில் நிலை மாற்றம், பண விரயம்.

**மகரம்**
மனமகிழ்ச்சி, பெருமையான சம்பவம், காரிய நன்மை, தொழில் சிந்தை.

**கும்பம்**
கடின உழைப்பு, பணியாளர் உதவி, முயற்சி கை கூடும், மேன்மை.

**மீனம்**
அச்சமான நிலை, ஆன்றோர் ஆசி, புதிய சிந்தை, ரோக பயம்;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

மன். மணற்றிட்டில் இறக்கி விடப்பட்ட அகதிகள்

# சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்

(கொழும்பு)

இராமேஸ்வரத்திலிருந்து தமிழக மீனவர்களின் படகுகள் மூலம் தாயகம் திரும்பிய வேளை, மீனவர்களால் மணற்திட்டு ஒன்றில் இறக்கி விடப்பட்ட மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஈழத்தமிழ் அகதிகள் 12 பேரையும் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் எம்பி. மொகைதீன் நேற்று முன்தினம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தலை மன்னாருக்கு அருகில் உள்ளமணற்திட்டு ஒன்றில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இறக்கி விடப்பட்ட இவர்கள், கடற்படையினரால் கரைக்கு அழைத்து வரப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் அனைவரையும் சொந்தஇடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த)

# போதிய வசதிகளில்லை பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர் அவதி

(தென்மராட்சி)

திருநெல்வேலிமுத்துத்தம்பி வித்தியாலயத்தில் இயங்கிவருகின்ற பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் போதிய தளபாடங்கள் மற்றும் மலசல கூடவசதிகள் இன்மையால் அங்கு பயிலும் ஆசிரிய மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

1986 ஆம் ஆண்டு முதல் பலாலியில் இருந்து இடம் பெயர்ந்த நிலையில் இருக்கும் இக்கலாசாலைக்கு ஒருநிரந்தர இடம்இன்னமும் இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

# கலைவாணி ச. ச. நிலையம் கொலறா ஒழிப்பில் தீவிரம்

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டில் கொலறாநோய் பரவிவருவதைஅடுத்து ஓட்டுமடம் கலைவாணி சனசமூகநிலைய உறுப்பினர்கள் 'தொற்றுநோய்களைத்தடுக்க சூழலைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் யாழ். நகர்ப்பகுதியில்உள்ள வீடுகளுக்குச்சென்று சுகாதார அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருக்கவேண்டிய அவசியம்பற்றியும் சுற்றாடல் மாசடைவதால் ஏற்படும் நோய்கள்பற்றியும் பிரசார நடவடிக்கைகளைமேற்கொள்வதோடு துண்டுப்பிரசுரங்களையும் இவர்கள் விநியோகித்து வருகின்றனர். (உ-43)

# மறியல் போராட்டம்

(திருநெல்வேலி)

சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி யாழ். கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் மறியற் போராட்டம் இடம்பெற்றது.

ஐக்கிய சோசலிசக்கட்சியின் ஆதரவில் இடம்பெற்ற மறியல் போராட்டத்தின் போது, சிறைக் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டது. (இ-43)

# விண்ணப்ப படிவங்களை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாகவுள்ள தொழிலுரிமைத்துவமும் சிறு வியாபார முகாமைத்துவமும் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அதற்கான படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (உ)

# பிணையில் விடுவிப்பு

(திருநெல்வேலி)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 23. 6. 2001 அன்று வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட திருமலையைச் சேர்ந்த காசிக் குட்டி சிவசீலன் (வயது 24) என்பவர் யாழ்ப்பாண உயர் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார். (உ-43)

# பனை மீள்நடுகைத் திட்டம் படையினர்இன்றுஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

பனை மீள்நடுகைத் திட்டத்தினை படையினரும் மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த வகையில், இன்று காலை 9.30மணிக்கு கைதடி பனை அபிவிருத்திச் சபை அலுவலகச் சூழலில் 6ஆயிரம் பனை விதைகளைப் படையினர் நடுகை செய்யவுள்ளனர்.

இந்நிகழ்வில் வரணி 52வது படைப்பிரிவுத் தளபதி பிரிகேடியர் திஸ்ஸஜெயவர்த்தன, யாழ். குடாநாட்டு பிரதான சிவில் நிர்வாகஇணைப்பதிகாரி பிரிகேடியர் டபிள்யு ஆர். வசந்தகுமார மற்றும் படை அதிகாரிகள், தென்மராட்சிப் பிரதேச செயலர், கிராம அலுவலர்கள், பனை அபிவிருத்திச் சபை உயரதிகாரிகள ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# ஜனாதிபதியின் நடவடிக்கையால் நாட்டிற்கு பேராபத்து ஏற்படலாம்

## இதன் காரணமாக இவரை பதவிநீக்க சட்டத்தில் இடமுண்டாம்

(கொழும்பு)

**ஜனாதிபதிக்கு சித்தப்பிரமை பிடித்திருக்கிறது எனச் சான்றுப்படுத்தக் கூடியதாகவுள்ளது. பலவருடங்களாக இவர் கூறிவந்துள்ள விடயங்கள் உளநோய்க்கு உள்ளாகியுள்ளார் என்பதை உறுதிப்படுத்துகின்றன.**

**இது பற்றி ஜனாதிபதியின் குடும்பத்தினரே கவலை கொள்ளவேண்டியவர்கள்.**

இருப்பினும், ஜனாதிபதியே ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாக இருப்பதன் காரணமாக இதனால் நாட்டிற்குப் பெரும் ஆபத்துகள் ஏற்படலாம்

சண்டே லீடர் பத்திரிகையின் அண்மைய ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

உளரீதியாகவோ உடல்ரீதியாகவோ பாதிப்புக்குள்ளாகிய ஒருவர், அரசியற் சட்டத்தின் 38 (2)பிரிவின்படி பதவியில் இருந்து அகற்ற முடியும்.

மனோ நிலை சரியில்லாத ஒருவர் சமாதான வேலைத்திட்டத்தையும் சிதைத்துவிட முடியும்

அரச அதிகாரிகளின் உளத்தகுதி நிலையைமதிப்பீடுசெய்யும் உளநோய் மருத்துவர்களின் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். என்றுசுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும்,

வர்த்தகப்புள்ளி ஒருவர் தனக்கு 50 மில்லியன் ரூபா இலஞ்சம் தருவதற்கு முன் வந்ததாக ஜனாதிபதி 1994 இல் கூறியிருந்தார்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில், 'ஏழுவருடங்கள் நாம் சாதுக்களாக இருந்தோம். ஆனால் இனிமேல் எம்மில் ஒருவரையேனும் அவர்கள் கொல்வார்களாயின் நாம் அந்தக் கொலைகாரர்களைக்கொல்லுவோம்' என்று திஸ்ஸமாரகமாவில் கட்சியினர் மத்தியில் பேசினார்.

ஆனால், அண்மையில் நிலைமை மோசமாகிக் கொண்டு வருகின்றது. என்னை கொல்வதற்கு அரசாங்கம் முயற்சித்தால், 500 பேர்களின் உயிர்களையாவது பலிகொண்டபின்னர் தான் சாவேன் என்று கூறினார்.

25 ஆயிரம் ரூபா இலஞ்சம் கொடுக்காததால் தனது மகனுக்கு றோயல் கல்லூரி அனுமதி கிடைக்கவில்லையென்றும், அதற்கு அப்போது கல்வியமைச்சராகவிருந்த இன்றைய பிரதமரே காரணமென்றும் கூறினார்.

இது நடைபெற்றதாக இவர் கூறும் ஆண்டின் பின் 10க்கும் மேற்பட்ட தேர்தல் பிரசாரங்கள் நடந்தன. அவற்றிலெல்லாம் இதுபற்றி இவர் பிரஸ்தாபித்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வலயகல்விபணிமனைகளில் வாகன வசதி இல்லை

(தென்மராட்சி)

சாவகச்சேரி, தீவகம், வடமராட்சி ஆகிய கல்வி வலய அலுவலகங்களுக்கு வாகன வசதிகள் இல்லாமையினால், கல்வி அபிவிருத்தி நடவடிக்கைளை மேற்கொள்வதில்பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக மேலதிககல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்வலயங்களிலுள்ள பல பாடசாலைகளில் மாணவர்களுக்கான தளபாடங்கள் பற்றாக் குறையாக இருந்து வருவதால், மாணவர்களுக்கான கல்வியைப் பூரணமாகவழங்கமுடியாத நிலை இருக்கிறது எனவும்,

குடாநாட்டிலுள்ள பல பாடசாலைகள் புனரமைப்புச் செய்யவேண்டியநிலையிலும் இருக்கின்றன என அவர் சுட்டிக்காட்டினார். (உ-77)

## விடுதலையான படை வீரர்களுக்கு பெறுமதி வாய்ந்த வீடு

(கொழும்பு)

அண்மையில் தமிழீழ விடுதலை புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட கடற்படை தளபதிபோயாகொட உட்பட ஆறு படைவீரர்களுக்கும் 15 மில்லியன் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தேசமாயை லலித்கொத்தலாவல விடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய சிலிங்கோ நிறுவனம் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கு மேலதிகமாக அவர்களது குடும்பங்களின் நலன்களுக்காகவும் உதவி வழங்குவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொமோண்டோ போயாகொட தனக்கு வழங்கவுள்ள வீட்டிற்கான நிதியை கொண்டு படை நடவடிக்கைகளில் இறந்த 22 கடற்படை வீரர்களின் குடும்பங்களுக்குஏதாவது அன்பளிப்புச்செய்யுமாறு கேட்டுகொண்டுள்ளார். (உ-7

## படையின் விடுதலைக்கு அரசாங்கம் பாடுபடும் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

திருகோணமலை வில்கம் விகாரைக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்ட 6 இராணுவவீரர்களையும் விடுவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொளும் என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய ஸ்ரீ விபஸ்சி தேரரை சந்தித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ் 6 இராணுவத்தினரதும் விடுதலை தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கத்துடன் தான் பேச்சுவார்த்தை நடத்த இருந்ததாகவும், ஆனால், இலங்கைக்கு அவர் வராத காரணத்தால் அது சாத்தியப்படவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதே சமயம், திருகோணமலை முள்ளிப் பொத்தானையில் வைத்து கந்தளாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இரு விடுதலைப்புலி உறுப்பினர்களும் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாகவும்,

இவர்களின் விடுதலை குறித்த விடயத்தில் அரசு நாட்டின் பொதுவான சட்டத்தை பிரயோகிக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (உ-8)

## மாகாண மட்ட அஞ்சல் தினப் போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அஞ்சல் தினத்தையொட்டி மாகாண ரீதியில் மாணவரிடையே நடத்தப்பட்ட கட்டுரை, சித்திரம், முத்திரைசேகரித்தல் தொடர்பான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்குரிய பரிசில்கள், இலங்கைவங்கி (யாழ். கிளை) மற்றும் ஸ்ரீமுருகன் முகவர் அஞ்சலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன், இன்று வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தின் அலுவலகத்தில் நடைபெறும் விழாவில் வழங்கப்படவுள்ளன

வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு,

**கட்டுரைப்போட்டி (தமிழ்)**
**கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்:-
ஆர். மோஹனப்பிரியன்- ஹாட்லிக் கல்லூரி;
இரண்டாமிடம்
பீ. ஆர். நிஷாந்தி - மன். புனித சேவியர் பெண்கள்பாடசாலை.

**கட்டுரைப்போட்டி (தமிழ்)**
**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்:-
எம். ஐ. அன்சியா - மன். எருக்கலம்பிட்டி மகளிர் மகாவித்தியாலயம்.
இரண்டாமிடம்:-
எம். டேன்ஃபைறன்- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
மூன்றாமிடம்:-
ஜெராலின் தனுஷியாஜோன் பிள்ளை- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**கட்டுரைப்போட்டி (ஆங்கிலம்)**
**கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்:-
கார்த்திகா சக்திவேல்- மெதடிஸ்த பெண்கள் உயர் நிலைப் பாடசாலை.

**சித்திரப் போட்டி**
**கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்:-
ஜெயராஜா நதீஸ்- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
இரண்டாமிடம்:-
இராஜரத்தினம் அனுஷன்- புனித சேவியர் ஆண்கள் பாடசாலை.
மூன்றாமிடம்:-
தங்கமோஹன் ராஜ்குமார்- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,

**சித்திரப் போட்டி**
**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்:-
ஜே. டீ. அந்தோனிதாஸ்- மன். புனித சேவியர் ஆண்கள் பாடசாலை.
இரண்டாமிடம்:-
முருகையா நிஷாலினி- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
மூன்றாமிடம்:-
ஜே. செபஸ்டியன்- மன்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் நீதித்துறை, உள்துறை அமைச்சுகள் கைவிரிப்பு

(கொழும்பு)

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்களை விசாரிப்பதற்கு மேலதிகமான விசேட நீதிமன்றங்கள் ஏற்பாடு செய்யப்படும் என்று நீதியமைச்சின் செயலாளர் தாரா விஜயதிலக தெரிவித்துள்ளார்.

இதற்கு ஒரு நீதிபதியை பிரதம நீதியரசர் நியமிக்கும் வரை தாம் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதித்துறைக்குள்ள சுதந்திரத்தை நாம் மதிக்கவேண்டுமென்பதால் நீதிமன்றங்களின் தீர்மானங்களில் தலையீடு செய்து சந்தேகநபர்களை விடுவிக்கும்படி கோர முடியாது. பிரதம நீதியரசர் விசேட நீதிமன்றத்திற்கு ஒரு நீதிபதியை நியமித்து வழக்குகளை துரிதப்படுத்துவார் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என்று நீதியமைச்சர் ஜே. எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களை விடுவிப்பதில் தனது அமைச்சினால் எதுவும் செய்வதற்கில்லை. அவர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை பராமரிக்கிறோம். நீதிமன்ற உத்தரவின்றி அவர்களை விடுவிக்க முடியாது. நீதியமைச்சு முடிந்ததை செய்யும் என்று உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்திருக்கிறார்.

களுத்துறை, ஜாவத்தை சிறைச்சாலைகளிலுள்ள 139 கைதிகளின் உண்ணா விரதம் நேற்றுடன் 8 நாட்களை நிறைவு செய்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இப்போராட்டத்தில் இணைந்து கொண்ட மட்டக்களப்பு சிறைச்சாலை சந்தேக நபர்களின் உண்ணாவிரதம் நேற்றுடன் ஐந்து நாட்களை அடைந்துள்ளது;

இது இவ்விதமிருக்க நேற்று முன்தினம் களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து அமைச்சர்கள் மகேஸ்வரனும், ராஜிதசேனாரட்ணவும் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

# செயலக திறப்பு விழா மலர்

## வாழ்த்துச் செய்தி

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையை ஆரம்பித்து அதன் செயலகத்தையும் திறப்பு விழா செய்வதையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மிக ஆர்வத்துடன் வரவேற்கின்றது. இந்த மாணவர் பேரவை தமிழ் மக்களின் சுய நிர்ணய அரசியல் வாழ்விற்கும், சுதந்திரமான கல்விக்கும் தமிழர் கலாசாரத்தோடு இணைந்த வருங்கால வாழ்வுக்கும் அர்ப்பணத்தோடு பாரிய கடமையாற்றும் என எதிர்பார்க்கிறோம்.

மாணவர்களின் எதிர்காலம் ஒளிவளர் விளக்காய் உயரட்டும்.

''ஒற்றுமையேபலம்''

த.பஞ்சலிங்கம்
சி.து.பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

த.மகாசிவம்
பொதுச்செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

## ஆசிச் செய்தி

தமிழீழ மக்களினது கலாசார, அறிவுசார் பொருளாதார மற்றும் மனித வளங்களைப் பாதுகாத்து முன்னேற்றுவதற்கும், தாய் மண்ணைக் கட்டியெழுப்புவதற்குமான பொருத்தமான உந்து சக்தியை உருவாக்கும் நோக்குடன், சர்வதேசத்திலும் வதியும் தமிழீழ மாணவர்களின் ஒன்றிணைப்பை வளர்க்க ஒரு தலைமைக் காரியாலயம் யாழ். பரமேஸ்வரா சந்திக்கு அருகில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்தருணத்தில் இம்முயற்சிக்கு எமது வாழ்த்துக்களையும் மகிழ்ச்சிகளையும் தொவித்துக் கொள்கின்றோம்.

இம் மாணவப் பேரவையானது பல்லின மக்களது கருத்துக்களுக்கும் சிந்தனைகளுக்கும் இடமளித்து மாணவர் திறமைகளைப் பேணி வளர்க்கும் என எதிர்பார்த்து இறை ஆசியை வேண்டுகிறேன்.

யாழ்.ஆயர்,
தோமஸ் சவுந்தர நாயகம்.

## வாழ்த்துச் செய்தி

தமிழன் தன் உரிமைகளையும் உடமைகளையும் உணர்வுகளையும் காக்க வேண்டிய கடமையாளன். உலகெங்கிலும் சிதறி வாழுகின்ற தமிழ் மாணவர்களை ஒன்றிணைத்து தமிழீழ மக்களினது கலை கலாசாரம், அறிவு மற்றும் மனித வளங்களை முன்னேற்றுவதற்காகவும் எம் உயிரினும் மேலான தாய் மண்ணை கட்டி எழுப்புவதற்காகவும் ''சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை'' என்ற மாபெரும் சக்தியை உருவாக்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். இதற்கு மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் சார்பில் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

தலைவர்,
தமிழ் இலக்கிய மன்றம்,
மொறட்டு பல்கலைக்கழகம்.

## திறப்பு விழா வாழ்த்துரை

சர்வதேச தமிழீழ மாணவர் ஒன்றியத்தால் ''திறப்பு விழா மலர்'' வெளியிடப்படுவது பாராட்டுக்குரிய ஒரு விடயமாகும்.

மாணவர்களது கல்வியை வளப்படுத்துவது ஆசிரியர்களது கடமையாகும். கல்விச் சீர்கேட்டின் காரணமாக ஒழுக்க கேடான நடவடிக்கைகளும் இடம் பெறும் இக்கால கட்டத்தில் நல்ல கல்வியினை வழங்குவதாலேயே சிதறிய ஒழுக்கத்தை மீளக் கட்டி எழுப்ப முடியும். ஆகையால் கல்வி மேம்பாட்டை வளர்ப்பதற்கு தடையாக இருக்கும் காரணிகளை நாம் வெற்றி கொள்ளவும் அதற்குத் தேவையான செயற்பாடுகளில், வருங்காலத்தில் ஆசிரியர்களாகும் நாம் எங்களால் இயன்ற முழு ஒத்துழைப்பை வழங்குவதிலும் பெருமிதம் கொள்வோம். நல் சிந்தனையினால் வெளியிடப்படும் இம்மன்ற செயற்பாடுகள் கல்விக்கும் அதனது வளர்ச்சிக்கும் பெரிதும் பயனளிக்க வேண்டும் என பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

மாணவர் ஒன்றியம்.
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## திறப்பு விழா வாழ்த்து

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைக் காரியாலயம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதையிட்டு மனிதநேய அமைப்புக்களின் இணையம் - யாழ் மாவட்டம் பெருமிதமடைகிறது. பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெறுவதுடன் மட்டும் நின்று விடாது தமிழ் மாணவர்கள் தங்கள் கலாசாரத்தைப் பேணிக் காப்பதற்கும், தொழில் நுட்பத்தை மேம்படச் செய்வதற்கும், அபிவிருத்தியை வளர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர்கள் மத்தியில் கல்வி அறிவை மட்டுமன்றி, தமிழ் மக்களின் கடந்த கால சரித்திரத்தை அறிய வைப்பது. மனித உரிமைகளை விளங்க வைப்பது. சிறுவர்களின் உரிமைகளையும் கடமைகளையும், அறிவுறுத்தல் ஆகியவற்றுடன் பொறுமையைக் கடைப்பிடிப்பதன் வாயிலாக, ஒற்றுமையையும், மனித நேயத்தையும், வளர்க்க முடியும்.

சுப்பிரமணியம் பரமநாதன்,
தலைவர்,
மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்
யாழ்.மாவட்டம்.

## வாழ்த்துச் செய்தி

தமிழ் மாணவர்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பற்பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் கல்வியினை பயில்கின்றனர். இவர்களின் கல்வியை உரம் ஊட்டி வளமாக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமது இனத்தின் முன் உண்டு. இவ்வேளையில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தனக்கென தலைமைக்காரியாலயத்தை நிறுவுவது போற்றத்தக்கது.

இப்பேரவையின் வழிகாட்டல் மூலமும், ஆதரவுடனும், தேசிய மட்டத்திலும், சர்வதேச ம்ட்டத்திலும், சகல துறைகளில் தமிழீழ மாணவர்கள் தமது சாதனைகளை நிலைநாட்ட வழியமைக்கின்றது. எமது மண்ணின், மக்களின், இனத்தின் விடிவுக்காக உழைக்க வேண்டும். உண்மையான உழைப்பும், உயர்ந்த இலட்சியமும் இணைந்து விட்டால் விடிவு நிசசயம். எமது தமிழீழ மாணவர்கள் நாளைய புதிய யுகத்தினைப் படைக்க முன்னோடியாக விளங்கும் சர்வதேச மாணவர் பேரவைக்கு எமது வாழ்த்துக்கள்.

வி.தயாபரன்,
செயலாளர், மாணவர் ஒன்றியம்,
உயர் தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வாழ்த்துச் செய்தி

தமிழீழத்தின் பொருளாதாரத்தை வளம்படுத்தவல்ல புத்திஜ"விகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வர உருவாக்கப்பட்ட அமைப்பான சர்வதேச தமிழீழ மாணவர் பேரவ்வை வளம்படுத்த வேண்டியது மாணவர்களான எம் கையில் ஒப்படைக்கப்பட்ட தலையாய கடமையாகும்.

ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் ஓங்கிய குரலாய், சர்வதேச மாணவ சமூகத்தின் சங்கநாதமாய் சர்வதேச சமூகத்தில் தமிழ் மாணவ பிரதிநிதியாய் வீறுநடை போடப்போகும் இந்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்கு எம் மனப்பூர்வ ஆதரவையும், ஆசியையும் வழங்குவதில் பெருமையடைகின்றோம்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
பல்கலைக்கழகம்.

## இளமை குன்றாத தமிழ் வளர்க

தமிழையும், தமிழ் மண்ணையும் மீளக் கட்டியெழுப்ப வேண்டியதை உணர்ந்து ''சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை'' அமைத்திருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது மண்ணின் மூலவளம், மனிதவளம் சிதறடிக்கப்பட்டு வாழ்வதற்காக நாட்டை விட்டு வெளி நாடுகள் சென்று எம் மக்கள் வாழ்ந்துவரும் இக்காலகட்டத்தில் எமது கலை, கலாசார விழுமியங்களும் பாதுகாக்கப்பட வேண்டியும் மண்ணையும், தமிழ் மொழியையும் வளர்க்கவும், சுயசார்புடன் முன்னேற்றும் எண்ணக்கருவுடன் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் ''சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின்'' தலைமைக் காரியாலயம் யாழ் மண்ணில்திறப்பதையிட்டு எமது அக மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தனக்காக தனித்துவம், கௌரவத்துடன், அறுகுபோல் வேர் ஊன்றி ஆல் போல் தழைத்தோங்க வேண்டுமென்று பேரவையின் வாழ்வு வளரவும் வளம் பெறவும் எமது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்.

''விவேகம், வீரம் வேகம் கொண்ட இன்பத்
தமிழ் உலகெல்லாம் வாழட்டும்''

அ.கி.சிவசுப்பிரமணியம்,
கௌரவ செயலாளர்,
யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

## வாழ்த்துச் செய்தி

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தோற்றம் பெறும் நிகழ்வு எமது இனதது்ன் வரலாற்றில் முக்கியமான ஒரு நிகழ்வாக அமைய வேண்டும்.

இன்றைய பெரியவர்கள் எமது நாளைய சந்ததிக்காய் ஒரு ஆரோக்கியமான தேசத்தைக் கட்டி எழுப்பும் கடமையை செய்ய தவறும் போது, மாணவர்கள் தம் எதிர்காலத்திற்காய் தமக்கான தேசத்தை கட்டியெழுப்ப வேண்டும். அவ்வகையில் இப்பேரவையின் தோற்றம் வரவேற்கத் தக்கது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இம்முயற்சியில் வீறுடன் செயற்படும் போது இப்பேரவை வெற்றி பெற்றதாக எம் வரலாறு பதிவு செய்து கொள்ளும். அந்த வெற்றிக்காய் வாழ்த்துகின்றேன்.

Dr.சி.குமரவேள்,
செயலாளர்,
அ.வை.அ.ச. யாழ்.மாவட்டம்.

## யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தின் வாழ்த்துக்கள்

. மாணவர் சக்தி மகத்தானது. வல்லமை மிக்கது. இன்றைய மாணவர்களே நாளைய உலகின் சிற்பிகள்.

தம் பெருமை தாமறியாத நிலையில் தூங்கிக் கிடக்கும் எமது சக்தியை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஒன்று சேர்த்தும், சிதறிக்கிடக்கும், தமிழீழ மாணவர்களை ஈழத்தின் மலர்ச்சிக்காக உழைக்கவும் செய்தல் வேண்டும்.

''சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை'' இனிதே வளர்ச்சியுறவும் ''சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைக் காரியாலய திறப்பு விழா மலர்'' இனிதே மலர்ச்சியுறவும், எமது ஒன்றியத்தின் வாழ்த்துக்கள் என்றென்றும் உளதாகும்.

காசோ.சி.சிவசீலன்.
தலைவர்.

பா.சிவரூபன்,
செயலாளர்.

## நல்வாழ்த்துக்கள்

எமது இனத்தின் ஒரு பெரிய மூலதனம் கல்விதான். எமது மாணவர்களும் இளைஞர்களும் வல்லவர்கள்தான். ஒன்றுக்கும் சளைத்தவர்கள் அல்லர். உலகெங்கிலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மாணவச் செல்வங்கள் தங்கள் திறமைகளினால் மற்ற இன மக்களைத் திகைக்க வைக்கின்றனர். பொறியியல்துறை, கணனித்துறை, மருத்துவத்துறைகளில் புதிய புதிய கண்டு பிடிப்புக்களில் எமது இளைஞர்கள் சாதித்திருப்பதை நாம் அறிய முடிகிறது.

புதிய சமுதாயத்தை கட்டியெழுப்பும் மகத்தான பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். சிதறிக் கிடக்கும் மனித வளங்கள் இங்கு கொண்டுவரப்பட வேண்டும். எமது உண்மையான கலாசார விழுமியங்கள் காப்பாற்றப்பட வேண்டும். பொருளாதார அறிவு, கட்டு மானத் திறமை இவற்றை வளர்த்து முன்னேற்றி எமது மண்ணைக் கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு.

இவற்றை மையமாக வைத்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஒன்றை உருவாக்கியிருப்பது காலத்தின் தேவையை அறிந்து செய்த ஒரு நற்பணியாகும். இந்த திறப்பு விழாவை முன்னிட்டு ''திறப்பு விழா மலர்'' ஒன்றும் வெளி வருவதும் பெரு மகிழ்ச்சிக்குரியதே.

து.வைத்திலிங்கம்,
யாழ்.மாவட்ட மேலதிக,
அரசாங்க அதிபர்.

## நல் வாழ்த்துக்கள்

ஈழத் தமிழர்களின் தாயகம் -தேசியம் -சுயநிர்ணய உரிமையை தமிழீழத்தில் மட்டுமல்ல தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகள் எங்கும் 'பொங்கு தமிழ்' என்று ஓங்கி ஒலிக்க வைத்த பெருமைக்குரிய யாழ். பல்கலைக்கழகம் இன்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையை ஆரம்பித்துள்ளமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது.

புலம்பெயர் மண்ணில், நம் தேசத்து மாணவர்களின் அறிவுத்திறன் கண்டு உலகமே வியக்கின்றது.

இவ்வேளையில், இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள தலைமைக் காரியாலய திறப்பு விழாவில் எம்மால் நேரடியாக கலந்து கொள்ள முடியாது விட்டாலும் தமிழீழ மாணவர் பேரவைக்கு எமது வாழ்த்துக்களை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றோம். உலகெங்கும் வாழும் தமிழீழ மாணவர்களை ஒன்றிணைக்கும் பணி வெற்றி பெறட்டும்.

கி.சுதன்,
ஈழமுரசு (பாரிஸ் - பிரான்ஸ்)

## பயனுறுதி வாய்ந்த பணியாற்றலுக்கான பாராட்டும் வாழ்த்தும்

தேச விடுதலை வேண்டிப் போராடும் ஈழத்தமிழர்களாகிய எமக்கு கல்வி பெரும் மூலதனமாகவே அமைந்திருப்பதும், அதன் காரணமாக காலத்துக்கு காலம் எமது வளமான கல்வியை வேரறுக்க முயன்ற போதெல்லாம் நாம் மீண்டு எழுந்ததும் வரலாறு.

தமிழ் தேசத்தைக் கட்டியெழுப்பும் உந்துசக்தியாக ''சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை'' அமைக்கப்பட்டிருப்பது மகிழ்வூட்டுகின்றது. இன்றைய அமைதிப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களின் மத்தியில் இப்பேரவை ஆற்ற வேண்டிய பங்கு முக்கியத்துவம் உடையதாகும்.

''எமது தேசிய வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில் எமது கல்வித் துறை சீரமைக்கப்பட வேண்டும். எமது தேசியப் போராட்டம், எமது பண்பாட்டு வாழ்வு, எமது தேசிய பொருண்மிய வளம், எமது தேசிய இனத்தின் வரலாறு. ஆகியவற்றின் உண்மை நிலையும் பெறுமானமும் உணரப்படும் வகையில் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். என்ற தேசியத் தலைவரின் உள்ளத்துச் சிந்தனையை இப்பேரவை முன் நிறுத்திப் பார்த்தல் பயனுடையதாகும்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தனது நடுவகப் பணியகத்தை திறந்து வைப்பதையிட்டு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்வடைகின்றோம்.

க.விருதாச்சலம்,
செயலாளர், மாணவ ஒன்றியம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
உப தலைவர்,
சர்வதேச தமிழீழ மாணவ பேரவை.

# இஸ்ரேலியப்படைத் தாக்குதலுக்கு

# அமெரிக்கா கடும் கண்டனம்

(இஸ்லாமாபாத்)

காஸா நிலப்பரப்பில் தீவிரவாதிகள் குடியிருப்பதாக சந்தேகித்து இஸ்ரேலியப் படையினர் தாக்குதல் நடத்தியதில் 14 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

மேற்படி பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டமை குறித்து அமெரிக்காவும், பலஸ்தீனும் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளன.

இதே வேளை, இஸ்ரேலியப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே தமது படையினர் பதில் தாக்குதல் மேற்கொண்டதாக இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே நடை பெற்று வரும் வன்முறைகளை முடிவிற்குக் கொண்டு வந்து, அதன் மூலம் ஈராக் மீதான தாக்குதலுக்கு அரபு நாடுகளின் ஆதரவை அமெரிக்கா பெறும் முயற்சியிலேயே மேற்படி கண்டனத்தை அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இச் சம்பவங்களை அடுத்து காஸா நிலப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சு-04)

# பின்லாந்துப் பண்ணையில் 20 ஆயிரம் நரிகள் உயிரிழப்பு

(ஹெல்சிங்கி)

பின்லாந்து நரிப் பண்ணைகளில் வளர்க்கப்பட்ட சுமார் 20 ஆயிரம் நரிகள் திடீரென உயிரிழந்துள்ளன.

நரிகளுக்கு வழங்கப்பட்ட உணவு விஷமானதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நரித்தோல் உற்பத்தி செய்யும் நாடுகளில் பின்லாந்து முக்கிய இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நரி இறப்பதற்கான காரணத்தை உடனடியாகக் கூறமுடியாதுள்ளதாக பின்லாந்து மிருக வைத்திய ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (சு)

# காவிரி நீர் பிரச்சினையால் இருமாநிலத்திலும் பதற்றம்

(கர்நாடகா)

காவிரி ஆற்றுநீரைத் திறந்துவிடக்கோரி தமிழக அரசு விடுத்த கோரிக்கையினை, கர்நாடக அரசு தொடர்ந்து நிறைவேற்றத் தவறிவருவதால், இரு மாநிலங்களிலும் ஏற்பட்ட பதற்றத்தின் காரணமாக வன்முறைச் சம்பவங்கள் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழக அரசு காவிரி நீரினைத் திறந்துவிடுமாறு உத்தரவிட்டது. எனினும் அது இதுவரை அமுல்படுத்தப்படவில்லை.

இதனையடுத்து, கர்நாடகத்திலும், தமிழகத்திலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருவதாகவும், அந்த சூழ்நிலையில் வன்முறைகள் ஏற்படலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

கர்நாடகாவிற்குச் சொந்தமான காவிரி ஆற்றை திறந்துவிட்டால் தங்களுக்குப் பஞ்சம் ஏற்படுமென கர்நாடக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் உச்சநீதிமன்றத்தில் இந்த உத்தரவினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனக் கூறியுள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காக கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா அந்தப் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

காவிரி நீர் திறந்து விடப்படாததைக் கண்டித்து தமிழகக் கலைஞர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது (சு)

# காஷ்மீரில் இரு இராணுவ வீரர் பலி

(காஷ்மீர்)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இறுதிக்கட்டத் தேர்தல் நேற்று நடைபெற்ற போது முஸ்லிம் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் இந்திய இராணுவ வீரர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர். தோடா வாக்களிப்பு நிலையம் ஒன்றின் முன்பாக இடம்பெற்ற இத் தாக்குதலில், இராணுவ வீரர் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும், மற்றையவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபின் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (சு

# கால்நடை சிகிச்சை நிலையங்கள்

(தென்மராட்சி)

கால் நடை அபிவிருத்தித் திணைக்களம், கோப்பாய், வட்டுக்கோட்டைப் பகுதிகளில் புதிய கால் நடை வைத்திய சிகிச்சை நிலையங்களை சுமார் 5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணித்து வருகின்றது.

இவ் இரு சிகிச்சை நிலையங்களும் விரைவில் திறக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்படுமென திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-77)

# சக்தி விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் வித்தியாலய மாணவ மன்ற ஆதரவில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு அதிபர் சிவ கடாட்சம் தலைமையில் ''சக்திவிழா'' நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், ஓய்வுபெற்ற அதிபர் சமூகஜோதி கா. கணேசதாசன் 'தாய்மை வழிபாடு' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-10)

# உலக தரிசனம்

# பிரிட்டனுக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டவருக்கு புதிய திட்டம்

(லண்டன்)

பிரிட்டன், வெளிநாட்டவர்களின் குடியேற்றம் தொடர்பாக கடுமையான சட்ட திட்டங்களை நேற்று வெளியிட்டுள்ளது.

முக்கியமாகப் பொருளாதாரம், வர்த்தகம் ஆகியவற்றைக் காரணம் காட்டி, பிரிட்டனுக்குள் பிரவேசித்து புகலிடம் கோருவோரைக் கட்டுப்படுத்தவே இந்தச்சட்டதிட்டம் அமுல்படுத்தப்பட்டதாக உள்துறை அமைச்சர் டேவிற்லக்கா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில்பிரிட்டனில்மட்டுமே குடியேற்றம் தொடர்பான மிக இலகுவான சட்டதிட்டங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. எனினும் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி பெருந்தொகையான வெளிநாட்டவர்கள் புகலிடம் கோர முற்பட்டமையால் பிரிட்டன் அரசியலில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன

எனவே பிரிட்டனில் உள்ள மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நோக்கில், புதிய சட்டதிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதாக உள்துறைஅமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும், எதிர்காலத்தில் புகலிடம் கோருவதற்கான முறையான ஆதாரங்கள் இருந்தாலும் அவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று பிரிட்டன் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சு-04)

# ஐவரிக் கோஸ்டின் அரச படைத் தாக்குதலை தீவிரவாதிகள் முறியடிப்பு

(லண்டன்)

ஐவரி கோஸ்டின் அரச படைகளின் தாக்குதலை முறியடித்துள்ளதாக அந்நாட்டுத் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்

தீவிரவாதிகளின் கோட்டை எனக் கருதப்படும் பாக் பகுதியில் நேற்று முன்தினம்அரச படைகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே கடுஞ்சமர் ஏற்பட்டது

அரசபடைகள் தீவிரவாதிகளை ஒழிக்கும் நோக்கோடு 10 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை யூகோஸ்லாவியாவிலிருந்து இறக்குமதி செய்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடுத்த போரை முறியடித்து அவர்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழையாத வாறு தடுத்து நிறுத்தியுள்ளதாக தீவிரவாதிகள் குழுத்தலைவர் தெரிவித்துள்ளார்.

எனிலும் இந்த நகரைதாம் கைப்பற்றி இருப்பதாகஅரச படைகள் முன்னர் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது

இதேவேளை, கடந்த சில தினங்களில் இந்நாட்டில் அமைதியை கொண்டு வரும் நோக்கில் ஆபிரிக்க நாட்டு அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தமைதெரிந்ததே. (04)

# 2002 ஆம் ஆண்டு மருத்துவத்திற்கான நோபல் பரிசு மூவருக்கு

(லண்டன்)

2002 ஆம் ஆண்டு மருத்துவத்திற்கான நோபல் பரிசு பிரிட்டனையும், அமெரிக்காவையும் சேர்ந்த விஞ்ஞானிகள் மூவருக்கு வழங்கப்பட்டுள்ளது

சாதாரண உடல் வளர்ச்சியின் போது கலங்கள் செல் அணுக்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வது தொடர்பாக செய்த ஆய்விற்கே இப்பரிசு கிடைத்துள்ளது.

தென் ஆபிரிக்காவைப் பிறப் பிடமாகக் கொண்ட பிரிட்டிஷ்குடிமகனானஇப்கிஸ் பெனர் பிரிட்டன் காரரான ஜோன்ஸ்ரான், அமெரிக்கரான பொப் செவிற்ஸ் ஆகிய மூவருக்குமே1 மில்லியன்பெறுமதி வாய்ந்த இந் நோபல் பரிசு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு)

# காஷ்மீரில் இரண்டு இந்தியப்படையினர் பலி

(காஷ்மீர்)

இந்திய ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரின் யூரி மாவட்டத்தில் தீவிரவாத சந்தேக நபர்கள் நடத்திய திடீர்த்தாக்குதலில் குறைந்த பட்சம்2 இந்தியப்படையினர் கொல்லப்பட்டும், பலர்காயமடைந்தும் உள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள இறுதி சுற்றுவாக்குப்பதிவுக்கு முன்பாக, பிரசாரத்தின் கடைசிநாளான நேற்று இராணுவ வாகனத்தின் மீது காஷ்மீர் பிரிவினை வாத தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர் என பெங்ளூர் அதிகாரிகள்தெரிவித்தனர். (சு-4)

# ஈராக்மீதுபோர் தொடுக்கமுயற்சிக்கும் அமெரிக்காவிற்கெதிராகப் பேரணிகள்

(வாஷிங்டன்)

ஈராக் மீது போர் தொடுக்க முயற்சிக்கும் அமெரிக்காவிற்கெதிராக அந்த நாட்டில்பேரணிகள் இடம்பெற்றுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் நாட்டு மக்களுக்கு முக்கிய உரையாற்ற இருந்ததன் பின்னணியிலேயே, இந்தப் பேரணிகள் இடம் பெற்றிருக்கின்றன.

''எங்கள் பெயரில் அல்ல'' என்று பெயரிடப்பட்ட இப் பேரணிகள் அமெரிக்காவில் 25 இடங்களில் நடைபெற்றுள்ளன.

நியூ யோர்க்கில் இடம் பெற்ற பேரணியில் சுமார். 20 ஆயிரம் பேர் கலந்து கொண்டார்கள் எனவும், பல முன்னணி நடிகர்கள், நடிகைகள் உரையாற்றி இருக்கிறார்கள் என்றும் தெரியவந்துள்ளது.

அமெரிக்க மக்களின் [illegible] பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் ஜெகஸ்றோ மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

...ரைக் கூறிக் கொண்டு அமெரிக்க அரசு பிற நாடுகளைத் தாக்குவதையும், மக்கள மீது குண்டு மழை பொழிவதையும், மக்களைக் கொன்று குவிப்பதையும் தாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்று பேரணியில் ஈடுபட்டோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கா, சிக்காக்கோ, பிரான்சிஸ்கோ போன்ற இடங்களில் நடந்த பேரணிகளில் 'பொது மக்கள் ஒத்துழையாமை' என்ற வாக்குறுதியினை எடுத்துள்ளார்கள் என்று அறியப்பட்டுள்ளது.

ஈராக் மீது போர் தொடுப்பது தவிர்க்க முடியாது என்று மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின்போது தெரிவித்திருக்கின்றார். அத்துடன் ஈராக்கிற்கெதிரான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தேடும் ...

எகிப்து, ஈராக், லேபனான், குவைத் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கும் ஜெகஸ்றோ அந்த நாடுகள் ஈராக் மீதான நடவடிக்கைகளுக்குஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வார் எனத் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு- 04)

# நடமாடும் சுகாதாரசேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் நடமாடும் சுகாதாரசேவை எதிர்வரும் 15 ஆம்திகதி கல்வியங்காட்டில் இடம்பெறவுள்ளது. (உ-6)

எண்பதத்தான் ஓரா
முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே
கெடும்
குறள்

# வலம்புரி

## எங்கள் உறவுகளுக்காக....

களுத்துறைச் சிறையில் இருக்கும் தமிழ்க் கைதிகள் 139 பேர் தம்மை உடனடியாக விடுவிக்கக் கோரி 9 வது நாளாக உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலை அல்லது மரணம் இதில் இரண்டில் ஒன்று என்ற முடிவுடன் சாகும்வரையிலான அகிம்சைப் போராட்டத்தில் குதித்துள்ளனர். எட்டாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில குதித்துள்ள தமிழ்க் கைதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு எழுதிய உருக்கமான கடிதத்தில் எமது விடுதலைக்காக நாம் மேற்கொண்டுள்ள சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் நாம் தியாக மரணத்தைச் சந்திக்க நேர்ந்தாலும் சமாதான முயற்சிகள் எந்தத் தடையுமின்றி முன்னெடுக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளனர்.

நான் வாழா விட்டாலும் மற்றவர்களாவது வாழ வேண்டுமென்ற உயர்ந்த சிந்தனை சிறைகளுக்குள் இருக்கின்ற உள்ளங்களில் இருந்து எழுந்துள்ளதெனில் அவர்கள் சமாதானத்தின்பால் கொண்டுள்ள ஆர்வத்தை யுத்தத்தினால் அனுபவிக்கின்ற துன்பத்தை நாசுக்காக அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு உண்ணாவிரதிகள் எழுதிய கடிதம் ஓர் மன உறுதியுடன் எழுதப்பட்ட நெஞ்சை நெருட வைக்கின்ற கடிதமாகும். இக் கடிதத்திலிருந்து கைதிகளின் உண்ணாவிரதம் கைவிடப்படுவதாயின் அது அவர்களின் விடுதலையினூடாகவே நடக்க முடியும்.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் போது, அரசும்- விடுதலைப் புலிகளும் கைதிகளைப் பரிமாறிக் கொள்ளும் போது, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ்க் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளுக்குள் அடைக்கப்பட்டுள்ளனரெனில் ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது எந்தளவு தூரம் அடக்கு முறைகளையும், அடாவடித் தனங்களையும் புரிந்துள்ளன என்பதைச் சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதனைப் புரிய வைப்பதற்காக- எமது உறவுகளின் விடுதலைக்காக ஒவ்வொரு தமிழனும் தனது உணர்வை வெளிப்படுத்த வேண்டும்.

# அஞ்சல்சேவை தரமாகவும், வேற்றுமையின்றியும் செயற்பட உதவியது "சர்வதேச அஞ்சல் ஒன்றியம்"

**இன்று உலக அஞ்சல் தினம்**

''ஒருவர் மனதை ஒருவர் அறிய உதவும் சேவையிது'' என அஞ்சல் சேவையைப் பற்றி மனம் மகிழப் பாடினான் ஓர் ஒப்பற்ற கவிஞன். இது வெறும் கவிதை வரியல்ல. சமுதாய நோக்கில் மிகப் பெரிய உண்மையாகும். எங்கோ ஆறாயிரம் மைல்களுக்கப்பால இருக்கும் ஒருவரின் உள்ளத்தைத் திறந்து காட்டக்கூடிய கடிதத்தை இங்கு உரிய முறையில் ஒப்படைக்கும் அற்புத சேவையிது.

எமது வாழ்வின் ஓர் அங்கமாகவும் அவசியமானதாகவும் அவசரமாகவும் எமது அஞ்சல் சேவை கருதப்படுகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மன்னர்கள்செய்திகளைத்தூதுவர்கள் மூலமும் புறாக்கள் மூலமும் அனுப்பி வந்தனர். 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை அஞ்சல் சேவையின் மகத்துவம் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டப்படாமலே இருந்தது.

### முத்திரைப் பாவனை கண்டுபிடிப்பு

ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள 16 ஆம் நூற்றாண்டில் தங்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வின்படி அஞ்சல் பரிமாற்றத்தை மேற்கொண்டன. இதுவே முதன்முதலில் நடைமுறைக்கு வந்த அஞ்சல் பரிமாற்ற ஒப்பந்தமாகும்.

ஆயினும், நாடுகளுக்கிடையே ஏற்பட்ட தனிப்பட்ட பரிமாற்றங்களில் பல குறைபாடுகள் காணப்பட்டன. சேவைக்கட்டணம் வெவ்வேறு முறையில் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. ஆயினும், 1840 ஆண்டு சேர். றோலண்ட் ஹில் (Sir Rowland Hill) என்பவர் முத்திரை பாவிக்கும் முறையைக் கண்டுபிடித்தார். இதன் மூலம் சிலசிக்கல்கள தீர்ந்தன. 1843 ஆம் ஆண்டு அமெரிக்க ராஜ்யத்தின் அஞ்சல் மா அதிபதியின் வேண்டு கோளுக்கிணங்க அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் பிரதிநிதிகள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி சர்வதேச தபாலசேவையை மேம்படுத்த வழிவகுத்தனர். ஆயினும், இது இலகுவானதாகவும்வெற்றிகரமானதாகவும் இருக்கவில்லை. அதுமட்டுமல்ல சர்வதேச நாடுகள் யாவும் இணைந்து ஓர் உடன்படிக்கையை ஏறபடுத்தினாலன்றி தபால்சேவையை சீர்செய்வது இலகுவானது அல்ல என உணரத் தலைப்பட்டனர்.

### சர்வதேச அஞ்சல் ஒன்றியம்

1874 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி ஹெய்ன்றிச் வொன் ஸ்டீபன் (Heinrich Von Stephen) என்ற வடஜேர்மனிய அஞ்சல் உயர் அதிகாரியினால் பேர்ண் நகரில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது அதன்படி 09-10-1874 இல் பேர்ண் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பொது அஞ்சல் ஒன்றியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தை நிறுவுவது பற்றிய முன்மொழிவை ஐக்கிய அமெரிக்க நாட்டைச்

**சம்பந்தர் சிவராஜசிங்கம்**
யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர்

சேர்ந்த கௌரவ மொன்றகோமெரி பிளயர் (Mont Gomery Blair) என்பவர் கொண்டுவந்தார். ஆக, இவ்வுடன்படிக்கை 1875 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது 878 இல் இது சர்வதேச அஞ்சல் ஒன்றியம் (Universal Postal Unien) எனப் பெயர் மாற்றப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் சகல உறுப்பினர்களும் இதில் கலந்து கொளளலாம் அதே வேளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இல்லாத இறைமையுள்ள நாடுகளும் விண்ணப்பித்து சேரலாம். அங்கத்துவ நாடுகளில் 2/3 பகுதியினர் ஆதரித்தால் மட்டுமே இவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்.

ஒவ்வொரு நாட்டினதும் அஞ்சல் போக்குவரத்துமுறைகளைத் தீர்மானித்தல், கடிதங்களைக் கையாளுதல்பற்றி ஒரு வரைறையை ஏற்படுத்துதல், குறித்த எல்லைகளுக்கிடையே அஞ்சல் கட்டணங்களை தீர்மானித்தல் போன்றவை ஒன்றியத்தின் கடமைகளாக இருந்துவருகின்றன.

### ஐந்தாண்டில் திருத்தம்

ஒன்றியத்தின் சட்டமூலத்தின்படி துரித தபால்சேவை (EMS) 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தொழில்நுட்ப, உலகமயமாக்கல் போன்ற காரணங்களுக்காக ஒன்றியத்தின் சட்டதிட்டங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்படுகின்றன அல்லது திருத்தப்படுகின்றன.

கலாசார விழுமியங்களைப் பேணிக்காக்கும்நோக்கில், நாடுகளின் பாரம்பரிய முறைமையைப் பின்பற்றி, அதன் மகத்துவத்தை வெளிப்படுத்தும்நோக்கில் முத்திரைகளை உருவாக்க 1957 இல் ஒட்டாவா (Canada) மாநாடு சிபார்சு செய்தது. அண்மையில் முத்திரைசேகரிப்பு பற்றிய பரந்தஅளவிலான கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

பயிற்சிபெற்ற உத்தியோகத்தரை அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பி திட்டமிடல், முகாமைத்துவ செயற்பாடுதொடர்பான பயிற்சிக் கருத்தரங்குகளை ஒழுங்குசெய்து நாடுகளின் அஞ்சல்சேவை அபிவிருத்திக்கு உதவுவதும் இவ்வொன்றியத்தின் தலையாய கடமையாகும். நிர்வாகத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்டு அதற்கானதொழில்நுட்ப உதவிகளை இவ்வொன்றியம் சகல நாடுகளுக்கும் வழங்குகிறது.

### பயிற்சிக் கல்லூரிகள்

ஐக்கியநாடுகள் சபையுடன் இச்சங்கம் நல்லஉறவைக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் ஆபிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பயிற்சிக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உலகெங்கும் 695,000 தபால் நிலையங்கள் உள்ளதுடன்கிட்டத்தட்ட 7 மில்லியன் ஊழியர்கள் தபால் சேவையில் உளளனர். உலக மக்களின் உள்ளத்தைத் தொட்ட இச்சேவை வருடந்தோறும் சுமார் 545,000 மில்லியன் கடிதங்களைக்கையாளுகின்றது. அத்துடன்காசுக் சட்டளைசேவை அஞ்சல்கட்டளை சேவை, வங்கிச் சேவை போன்றவற்றைத் திறம்பட வழங்குகின்றது.

### வேற்றுமையில்லாததன்மை

மனிதஇனத்தில்வேற்றுமை உண்டு. ஆனால் அனுப்பப்படும் அஞ்சலில் வேற்றுமை இல்லை. எங்கும் ஒரேதன்மை எதிலும் ஒரே தனமைஇதுவே அஞ்சலின் சிறப்பும் மதிப்பும் தனிப்பட்ட ஒருவரின் இனம், சமூகஅந்தஸ்து, மதம்போன்ற குறுக்கீடுகள் இன்றி, தபால் ஒருவரைப்போய்ச் சேரவேண்டும். இதுவே அஞ்சலின் மகத்துவமாகும்.

பார்வையற்றோருக்கு இலவச தபாற்சேவையை அஞ்சல் ஒன்றியம் சிபார்சு செய்துள்ளது. இது மனிதாபிமானத்தின் உச்ச எல்லை என்பதை யாரும்மறக்கவோ மறுக்கவோ முடியாது.

1874 ஆம் ஆண்டுஒக்ரோபர் மாதம் 9 ஆம் நாள ஆரம்பிக்கப்பட்ட அஞ்சல்ஒன்றியம் இன்று 189 நாடுகளை அங்கத்துவப்படுத்தி வீறுநடைபோடுகிறது. இலங்கை இதிலே 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி சேர்ந்து கொண்டது. அஞ்சல் சேவையின் தரத்தை நிலைநிறுத்தி, சேவையைத் திறம்படச் செய்வதே இத்தினத்தின் நோக்கமாகும்.

சகலருக்கும் அஞ்சல்சேவை கிடைக்க வேண்டும். அதுவும் தரமான சிறப்பான அஞ்சல் சேவை கிடைக்க வேண்டும்ன இதுவே முன்னுரிமையான விடயமாகும்.

## மாகாண சுகாதார திணைக்களத்திற்கு

# ஒதுக்கப்பட்ட 56 மில்லியனில் 6 மில்லியன் மாத்திரமே பயன்பாடு

(தென்மராட்சி)

யாழ் மாவட்ட மாகாண சுகாதார திணைக்களத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கென வட கிழக்கு மாகாண சபை 56 மில்லியன் ரூபாவை இவ்வருட நிதியில் ஒதுக்கியுள்ள போதிலும் கூட, திணைக்களம் இது வரை சுமார் 6 மில்லியன் ரூபாவை மட்டுமே பயன்படுத்தியுள்ளது.

இதுகுறித்து யாழ் மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அதிருப்தியை அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

மாவட்டத்தின் தேவை கருதி ஒதுக்கப்படுகின்ற நிதியை உரிய திட்டமிடல் இல்லாமையினால் எப்படிப் பயன்படுத்துவது எனத் தெரியாது திண்டாடுவதால் வருட முடிவில் நிதி திரும்பிச் செல்கிறது.

இதனால் சம்பந்தப்பட்ட மாவட்டமே பின்னடைவுகளை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்படும்எனப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதே வேளை யாழ். மாவட்டத்தில் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பல திட்டங்கள் போதிய நிதியில்லாமையினால்செயல் படுத்தப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-77)

## தினசரி தியானம்

### துறவு

உலகத்தில் அனுபவிக்கத்தக்கஎல்லாப்பொருள்களும் அழியக் கூடியவை. ஒரு நாள் உங்களை விட்டு விட்டுச் செல்லக் கூடியவை, என்று நன்றாகத் தெரிந்த பிறகு, நீங்களாகவே ஏன் அவற்றைத் துறந்து விட்டு மேலான இன்பத்தை அனுபவிக்கக் கூடாது. முதுமை அழிக்கக் காத்திருக்கிறது என்று தெரிந்த பின்னும், ஒருவர் எதையும் பொருட்படுத்தாமல் பாவகரமான ஒழுக்கம் கெட்ட செயல்களில் ஈடுபடுவது எவ்வளவு பரிதாபமானது! ஆகவே, இப்போதே துறவினை மேற்கொள்ளுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## இந்து சமயப் பேருரை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும், இந்துசமயப் பேருரை எதிர்வரும் 12 திகதிசனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு இந்துவிவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் தலைமையில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதிபிரம்மஞானி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் ''மேன்மைகொளசைவநீதி'' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-3

## நிபந்தனையின்றி...

2ம் திகதி புதன்கிழமை விடுதலைப புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் விசேட உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டிருந்தார். ஏனைய ஆறு இராணுவத்தினரும் தொடர்ந்தும் புலிகளின் பாதுகாப்பிலேயே இருந்துவருகின்றனர். இந்நிலையில் இராணுவத தினரால் கைது செய்யப்பட்ட இரண்டு புலிஉறுப்பினர்களின் விடுதலை தொடர்பாக திருகோணமலை மேல் முறையீட்டு நீதிமன்றத்தில புலிகள் பிணை மனு வொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

இம் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ராஜா பெர்னாணடோ, எதிரிசூரிய ஆகிய இரு நீதியரசர்களும் விசாரித்த போது அரச சட்டத்தரணிகள் எவரும் இவரகள் மீதான பிணை மனுவை எதிர்த்து மனுத்தாக்கல் செய்ய வில்லை.

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்திருந்த மனுவை விசாரணைக் கெடுத்த நீதியரசர்கள் விடுதலைப புலி உறுப்பினர்களை பிணையில விடுதலை செய்து, மாதந்தோறும் ஒரு தடவை கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் சமூகமளித்து ஒப்பமிட வேண்டுமென்று தீரப்பளித்திருந தனர். மேன்முறையீட்டு நீதிமன் றத்தின தீர்ப்பு விடுதலைப்புலிகள் மத்தியில் அதிருப்பதியை ஏற்படுத்தியிருப்பதுடன் தமது உறுப்பினர்கள் இருவரையும் நிபந்தனை இன்றி விடுவித்தால மட்டுமே ஆறு இராணுவத்தினரையும விடுதலை செய்யலாம எனத் தெரிவித்துள்ளனர். (ம-8)

## வடக்கு...

உரையாடினார்.

சமாதானப் பேச்சுக்களின் முடிவில் வடக்கும் கிழக்கும் இணைகபடும் நிலைவந்தால் கிழக்கு முஸ்லிம்களுக்கு ஒரு தனியான நிர்வாக அலகு தேவை என்றும் திருமதி அஷ்ரப் வலியுறுத்தினார். வடக்கு கிழக்கு இணைப்பு இல்லாவிட்டால் தனி நிர்வாக அலகு ஒன்றைத்தாம் கோரப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார் கிழக்கு மாண முஸ்லிம்களின் நலன்களைக் கவனிப்பதற்கென அங்கிருந்தும் ஒருவர் அடுத்து நடக்கவிருக்கும் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ள வகை செய்யவேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார். இது பற்றி கவனத்தில் எடுப்பதாக பிரதமர் அவர்களிடம் உறுதியளித்தார் (ந)

## தமிழ்...

றங்களுக்கு கொண்டு செல்லுமாறு அல்லது சிறையில் இருந்து விடுவிக்குமாறு வேணடி தமது ஆட்சேபனைகளை உண்ணவிரதம் மூலம் தெரிவித்திருந்தனர். இதற்கு கவனம் செலுத்தாமையால் தற்போதைய துரதிஷ்டவசமான நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையை உருவாக்கியுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாபஸ் பெற்று இதன் கீழ தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு ஆசிரியர் சங்கம்கேட்டுள்ளது. (ந)

## கைதிகளை...

கண்டிவீதி, றம்பைக்குளம் ஹொறவப்பொத்தான வீதி, மன்னார் வீதி விவசாயப் பண்ணையில் இருந்து யாழ்ப்பாண வீதியாக ஆரம்பித்து வவுனியா செயலகத்தை வந்தடைந்தது அங்கு மேலதிக அரச அதிபர் இரகுநாதபபிள்ளையிடம் மகஜர் ஒன்றும் கையளிக் கப்பட்டது.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த ஆர்ப்பாட்டப் பேரணியும், மறியற்போராட்டமும் வவுனியா நகரை ஸ்தம்பிதம் அடையச்செய்தது.

ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் மேலதிக அரச அதிபரிடம கையளிக்கப்பட்ட மகஜரில்; விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின பேரில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் ஆனால் புலிகளுக்கு உதவியாக இருந்தவர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. இது கண்டிக்கத்தக்கது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 96ம் ஆண்டு...

தியசாலையில் விடுதி ஒன்றில் தங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை நீண்ட நாட்களாகத் தன்னை யாரென்று இனம் காண முடியாத நிலையில் இருந்த பிரஸ்தாப இளைஞர் தற்பொழுது தான் யாரென்று தனக்கு ஞாபகம வருவ தாகவும் தனது பெற்றோரிடம் செல்ல விரும்புவதாகவும் குறிப்பிட்டதாக மற்றொரு தகவல் வெளியாகியுள்ளது. (இ-6)

## கைதிகளுக்கு..

டத்திற்கு ஆதரவாக மறியலில் ஈடுபடவுள்ளனர்.

நண்பகல் 12மணிமுதல் 1மணி வரை போக்குவரத்தில் ஈடுபடும் வாகனசாரதிகள் குறித்த ஒருமணி வரையும் போக்குவரத்தில் ஈடுபடாது வாகனங்களை அந்தந்த இடங்களில் நிறுத்திகைதிகளின் விடுதலைக்கான மறியற் போராட்டத்திற்கு ஆதரவை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## பிரதமர்...

கொலைகள், பண்டாரவளை, பிந்துனுவெவ முகாம் படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் தமிழ்மக்களுக்கு எதிராக செயற்பட்டுள்ளனர். அவர்களை அரசு பிணையில் விடுதலை செய்திருப்பதால் இந்தத் தமிழ்க் கைதிகளை அரசு ஏன் விடுவிக்க முடியாது என்று பிரதமரிடம் தமிழ்க கூட்டமைப்பு எம்.பிகள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதேவேளை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பும் கைதிகள் விடுதலை தொடர்பாக நேற்று பிரதமரைச் சந்தித்துப் பேசியுள்ளார். எனத் தெரியவருகின்றது. (ம)

## அன்ரன்...

அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வரும் பயணமார்க்கம் தொடர்பாக திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்க முடியாமல் இருப்பதே வருகைக்குரிய தாமதம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ம)

## 2ம் லெப். மாலதி நினைவு நாள்

### தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 10.10.2002

2ம் லெப். மாலதி நினைவு நாளான, தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகள் வன்னிப் பெருநிலப்பரப்பு திறந்த வெளியரங்கில் நடைபெறக் காத்திருக்கின்றது...

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள் ஒருங்கிணைந்து நடாத்தும்

### மாபெரும் எழுச்சி நிகழ்வு



- மகளிர் படையணியின் இராணுவ அணிவகுப்புகள்
- மகளிர் படையணியின் போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் ஊர்திகள் பவனி
- உயிர்க் கவிதையின் உயர் வேதம்... (நாடகம்)
- உண்மைச் சம்பவங்களைத் தாங்கிய உயிரை உருக்கிடும் கலை நிகழ்வுகள்
- விசேட படையணியின் வீர தீரச் செயல்கள்
- தமிழீழ இசைக்குழுவின் இசைவார்ப்புகள்
- அமெரிக்காவின் 'கிறீன் பரே' அணியினரிடம் பயிற்சிகள் பெற்ற சிறிலங்காவின், One Commondo, Two Commondo விசேட அணிகள் மகளிர் படையணியின் புதிய போர்த் தந்திரோபாய யுத்தியினால் முறியடிக்கப்பட்ட மன்னகுளச் சமரின் மாதிரி வடிவ நிகழ்வு.
- இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறக் காத்திருக்கின்றன. . . .

வீழ்ந்தது விதை
எழுந்தது பயிர்
கடந்தது நெருப்பு
உயர்ந்தது கரம்.

பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும்... கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும்...
நேற்று எழுந்த எரிமலையை அணைத்தவர்கள். இன்று சமாதானப் பாதைக்கு வழி அமைத்தவர்கள்.
இந்த அக்கினிப்பூக்களா...! நீங்களே வியந்து நிற்க. உங்கள பிள்ளைகள் வெற்றியோடு உங்களை நோக்கி...
.................. காணத் தவறாதீர்கள் ..................

மாலதி படையணியின் உருவாக்கத்தில்....
களத்தில் நிற்கும் போராளிகளின் குரலாக வெளிவருகின்றது...

**வெஞ்சமரின் வரிகள்**
பாடல் ஒலிப்பேழை



அன்பரசி படையணி, திலகா படையணி உட்பட ஆயிரக்கணக்கான பெண் போராளிகள் பங்குகொண்டு நடாத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வினைக் கண்டு மகிழ அனைத்து மக்களையும் வருக... வருக... என அன்போடு அழைக்கின்றோம்.

காலம் - 10.10.2002
நேரம் - மாலை 3.00 மணி (தமிழீழ நேரப்படி)
இடம் - கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடல்

நன்றி
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

மகளிர் படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### உயர் பட்டப் படிப்புக்கள் பீடம்

**பட்டப்பின் கல்வித்தகைமைக கற்கைநெறி 'முழு நேரம், பகுத நேரம I,II**

**முழுநேர வகுப்புக்கள் 16.10.2002 ஆம் திகதியும**

**பகுதிநேர வகுப்புக்கள 19.10.2002 ஆம் திகதியும் ஆரம்பமாகின்றன.**

-பதிவாளர்.

யாழ் பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம். [C/5116]

## மரண அறிவித்தல்

### இராமசாமி பூரணவல்லி

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் நெலியான் வீதி சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி பூரணவல்லி நேற்று (08.10.2002) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி (முன்னாள் சங்கானை ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தன் (யாழ்.நியூ சயன்ஸ் ஹோல்), திருமலர்ச் செல்வி(லெபனான்), மதியழகன், திருவருள்(லெபனான்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாமதி, மதிவண்ணன்(லெபனான்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவர்களான துஷாந்தி, பிரசாந், தனுஷாந்தி, கபில்சாந், காலஞ் சென்ற லக்ஷாஜினி மற்றும் மதுஷா(லெபனான்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.10.2002) முற்பகல் 10 மணிக்கு நடை பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நெலியான் வீதி,
சுழிபுரம்.

தகவல்
இ.வசந்தன்
(யாழ்.நியூ சயன்ஸ் ஹோல்)

[C/5117]

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,மானிப்பாய்

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்.

*எமது சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப் படுகின்றது. கீழ்க் குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.*

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி - இன்று 09.10.2002.
2. கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி - 16.10.2002 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி - 16.10.2002 பிற்பகல் 2மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்விகளை ஏற்கவோ அல்லது மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5. கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபாலில் அல்லது தலைமைக் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் பந்தி 2ல் குறிப்பிட்டபடி கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

*அட்டவணை 1:–*

தளபாட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் (2002ம் ஆண்டு பதிவுசெய்த)

| வேலை விபரம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | ஜிஎஸ்ரி 12.5% |
|---|---|---|---|
| மானிப்பாய் நாமகள் சிறுவர் பாடசாலை | 500.00 | 150.00 | 20.00 |
| மானிப்பாய் சுதுமலை யுவசக்தி சிறுவர் பாடசாலை | 500.00 | 150.00 | 20.00 |
| சுதுமலை இந்து ஆரம்பப் பாடசாலை | 500.00 | 150.00 | 20.00 |
| பண்டத்தரிப்பு கலைவாணி பாலர் பாடசாலை | 500.00 | 150.00 | 20.00 |
| பிரான் பற்று சிறுவர் பாடசாலை | 500.00 | 150.00 | 20.00 |
| சாந்தை சித்தி விநாயகர் ச.ச. நிலையம் | 500.00 | 150.00 | 20.00 |
| நவாலி முருகன் ச.ச.நிலையம் | 500.00 | 150.00 | 20.00 |

*அட்டவணை 2:–*

வீதிகள்/கட்டடங்கள் வேலைக்கு 2002ம் ஆண்டு பதிவு செய்த ஒப்பந்த காரர்களுக்கு மட்டும்.

| | | | |
|---|---|---|---|
| கலைவாணி வீதி வடலியடைப்பு பண்டத்தரிப்பு | 2000.00 | 200.00 | 25.00 |

பி.விக்டர்
*செயலாளர்.*
*வலி.தென்மேற்கு பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம்,*
*மானிப்பாய்.*

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், ஜே.பி.யு.எம்.
**தலைவர்**

[C/5115]

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
சுத்தமானநல்லெண்ணெய்
**V.S.P லஞ் ஒயில்**
தயாரிப்பாளர்
26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.

சூழலில் உனக்கென்ன வெறுப்பு - அதைக்
காப்பது என்றுமுன் பெறுப்பு

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.